# சுபீட்சம்

SUPEEDSAM
EVERYTHING FOR PEOPLE

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செவ்வாய்க்கிழமை 16.08.2022 supeedsam.com supeedsam@gmail.com





நாள் தோறும் சுபீட்சம் மின்னிதழை பார்வையிட
www.supeedsam.com


## புலம்பெயர் அமைப்புக்கள் மீதான

# தடை நீக்கம்

## காரணம் என்ன?
### பாதுகாப்பு அமைச்சிடம் விமல் கேள்வி



புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மீதான தடை எதற்காக நீக்கப்பட்டது. தேசிய பாதுகாப்பு அச்சுறுத்தல் என்று கூறியே இந்த அமைப்புக்கள் மீது தடை விதிக்கப்பட்டது. அதனால் தடை நீக்கப்பட்டமைக்கான தெளிவான விளக்கத்தைப் பாதுகாப்பு அமைச்சு கூற வேண்டும்.

இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச வலியுறுத்தினார்.

02 ஆம் பக்கத்தில்...

## நம்பிக்கையான விடயம்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் பல புலம்பெயர் தமிழ் மக்கள் மீதான தடையை நீக்கியமை நம்பிக்கையான விடயம் என நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...

## இதுவே காரணம்



ஐ.நா மனித உரிமைகள் பேரவைக்கு தற்போதைய அரசாங்கம் வழங்கியிருந்த வாக்குறுதிகளுக்கு அமையவே, தடை செய்யப்பட்டிருந்த புலம்பெயர் தமிழ் அமைப்புகள் மீதான தடையை அரசாங்கம் நீக்கியுள்ளதாக, எதிர்க் கட்சியின் பிரதமக் கொறடா லக்ஷமன்

02 ஆம் பக்கத்தில்...

## நாங்கள் வரவேற்கின்றோம்



சில புலம்பெயர் அமைப்புக்கள் மற்றும் தனிநபர்கள் பயங்கரவாதப் பட்டியலில் இருந்து இலங்கை அரசால் நீக்கப்பட்டதை நாங்கள் வரவேற்கின்றோம் – என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

02 ஆம் பக்கத்தில்...

## மீண்டும் 3 மணிநேர மின்வெட்டு

இன்று 16 முதல் 19ஆம் திகதி வரை நாடளாவிய ரீதியில் சுழற்சி முறையில் 3 மணித்தியாலங்கள் மின்வெட்டினை மேற்கொள்ள இலங்கை பொதுப்பயன்பாடுகள்

02 ஆம் பக்கத்தில்...

## சர்வதேசத்தை ஏமாற்றும் தந்திர விளையாட்டாகும்!

தனது தடைப்பட்டியில் இருந்து புலம்பெயர் தமிழர் அமைப்புக்களை நீக்கம் செய்வதும், நீடிப்பதும் என்பதான அதன் நடத்தையானது எண்ணிக்கை இலக்கங்களுடன் சர்வதேசத்தினை ஏமாற்றும் ஓர் வேடிக்கை தந்திர விளையாட்டையே வெளிப்படுத்தி வருகின்றது என நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசியல் விவகாரங்களுக்கான அமைச்சு கருத்து வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவிக்கையில், ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் நிபந்தனைகளின் 1373 கீழ், இலங்கைக்குள் 577 நபர்களுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளதோடு, 18 அமைப்புக்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக இலங்கையின் பாதுகாப்பு அமைச்சின் வர்த்தமானி அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 316 பேருக்கான தடை நீக்கப்பட்டுள்ளதுடன், 6 புலம்பெயர் அமைப்புக்கள் மீதான தடையும் நீக்கப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

02 ஆம் பக்கத்தில்...

## கோட்டாபய தங்கியிருந்த சிங்கப்பூர் விடுதிக்கான கட்டணம் 67 மில்லியன் ரூபா?

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சிங்கப்பூரில் தங்கியிருந்த காலப்பகுதியில் 67 மில்லியன் ரூபாவை ஹோட்டல் கட்டணமாக செலுத்தியதாக தகவலறித்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவும் அவரது மனைவி அயோமா ராஜபக்ஷவும் கடந்த 11ஆம் திகதி தாய்லாந்து செல்லும் வரை சிங்கப்பூரில் உள்ள மரினா பே சாண்ட்ஸ் ஹோட்டலில் தங்கியிருந்தனர்.

02 ஆம் பக்கத்தில்...

## அவசரகால சட்டம் தானாக இரத்தாகும்

அவசரகால சட்டம் தொடர்ந்தும் நீடிக்கப்படாது என்றே எதிர்பார்க்கப்படுகின்றது.

கடந்த மாதம் 27ஆம் திகதி நாடாளுமன்றில் அவசரகால சட்டம் நிறைவேற்றப்பட்ட நிலையில், தற்போது நாடாளுமன்றம் 29ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

02 ஆம் பக்கத்தில்...

## கச்சத்தீவை மீட்பதே பாஜகவின் இலட்சியம்



கச்சத்தீவை மீட்க, பிரதமர் மோடியிடம் வலியுறுத்துவோம் என்றும் இதுவே, தமிழக பாரதீய ஜனதா கட்சியின் லட்சியம் எனவும் அக்கட்சியின் மாநில தலைவர் அண்ணாமலை தெரிவித்தார்.

இராமேஸ்வரத்தில், 75 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு நேற்றுமுன்தினம் (14) விசைப்படகில் பாரதீய ஜனதா கட்சி உறுப்பினர்கள் கடல் பயணம் சென்றனர்.

அதன் பின்னர் ஊடங்களுக்கு கருத்து தெரிவித்த அண்ணாமலை, இலங்கைக்கு

02 ஆம் பக்கத்தில்...

## மருதமடு அன்னையின் பெருவிழா



( வாஸ் கூஞ்ஞ )

மன்னார் மாவட்டத்தில் ஒரு முக்கிய யாத்திரிகர் ஸ்தலமாக விளங்கும் மருதமடு அன்னை பெருவிழா திங்கள் கிழமை (15.08.2022) நேற்று வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது.

மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை அனுராதபுரம் மறைமாவட்ட

02 ஆம் பக்கத்தில்...

# இன்று முதல் 19 வரையான மின்வெட்டு அட்டவணை

## Approved Power Interruption Schedule
අනුමත විදුලි කප්පාදු කාලසටහන
அங்கீகரிக்கப்பட்ட மின்தடை அட்டவணை

From 16th August 2022
To 19th August 2022

| Electricity Supply Disconnection Time | Electricity Supply Restoration Time | 16th August Tuesday | 17th August Wednesday | 18th August Thursday | 19th August Friday | |
|---|---|---|---|---|---|---|
| 5:30AM - 5:50AM | 8:30AM - 8:50AM | M, N, O, X, Y, Z (BOI Zones) | | | | 3 hrs |
| 6:00AM - 6:20AM | 8:30AM - 8:50AM | CC (Colombo City Commercial Zones) | | | | 2hrs 30min |
| 1:00PM - 1:30PM | 2:40PM - 3:10PM | I, J, K, L, S, T | | | | 1hr 40min |
| 2:40PM - 3:10PM | 4:20PM - 4:50PM | E, F, G, H, U, V, W | | | | |
| 4:20PM - 4:50PM | 6:00PM - 6:30PM | A, B, C, D, P, Q, R | | | | |
| 6:00PM - 6:30PM | 7:20PM - 7:50PM | I, J, K, L, S, T, U | | | | 1hr 20min |
| 7:20PM - 7:50PM | 8:40PM - 9:10PM | E, F, G, H, V, W, P | | | | |
| 8:40PM - 9:10PM | 10:00PM - 10:30PM | A, B, C, D, Q, R | | | | |

ශ්‍රී ලංකා මහජන උපයෝගිතා කොමිෂන් සභාව
இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு
Public Utilities Commission of Sri Lanka
PUCSL

## மீண்டும் 3 மணிநேர மின்வெட்டு

ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

இலங்கை மின்சார சபையினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதற்கமைய, A முதல் W வரையான வலயங்களுக்குட்பட்ட பகுதிகளில் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை 1 மணித்தியாலம் 40 நிமிடங்களும், மாலை 5 மணி முதல் இரவு 10 மணி வரையான காலப்பகுதியில் 1 மணித்தியாலம் 20 நிமிடங்களும் மின்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளது.

மேலும் கொழும்பு முன்னுரிமை வலயங்களில் காலை 6 மணி முதல் 8.30 மணி வரையான காலப்பகுதியினுள் 2 மணித்தியாலம் 30 நிமிடங்களும் மின்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளது.

M, N, O, X, Y, Z ஆகிய வலயங்களுக்கு அதிகாலை 5.30 மணிமுதல் காலை 8.30 மணிவரை மின்துண்டிப்பு அமுலாகும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## மருதமடு அன்னையின் பெருவிழா

ஆயர் மேதகு நோபேட் அன்றாடி ஆண்டகை கொழும்பு உயர் மறை மாவட்ட துணை ஆயர் மேதகு அன்ரனி றஞ்சித் ஆண்டகை இவர்களின் கூட்டுத்திருப்பலியுடன் இவ் விழா கொண்டாடப்பட்டது.

கடந்த இரு வருடங்கள் கொரோனா தொற்று நோய் காரணமாகவும் மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாகவும் இவ் யாத்திரிகள் மருதமடு விழாவுக்கான வருகை அன்று மிக சொற்பமாகவே காணப்பட்டது.

ஆனால் இம்முறை இவ் பெருவிழாவுக்கு சுமார் நான்கு இலட்சம் பேரே வருவார்கள் என எதிர்பார்க்கப்பட்டபோதும் இன்றைய சூழலில்



கொரோனா அச்சமும் எரிபொருள் தட்டுப்பாடு காணப்பட்டபோதும் முன்னைய காலம்போன்று இலங்கையின் நாலா பக்கங்களிலிருந்தும் சுமார் ஆறு இலட்சம் பக்தர்கள் இவ் பெருவிழாவில் கலந்து கொண்டதைக் காணக்கூடியதாக இருந்தது.

இவ்வாறு பல நூற்றுக் கணக்கான அருட்பணியாளர்களும் துறவியர்களும் இவ் பெருவிழாவில் கலந்து கொண்டனர். இவ் விழாவை முன்னிட்டு வருகை தரும் பக்தர்களின் நலன் நோக்கி மன்னார் ஆயர் இல்லமும் மன்னார் மாவட்ட செயலகமும் இணைந்து முன்னெடுக்கப்பட்ட அத்தியாவசிய தேவைகள் திறம்பட இடம்பெற்றிருந்தமையும் நோக்கக்கூடியதாக இருந்தது.

அத்துடன் திட்டமிட்ட முறையில் போக்குவரத்து சேவைகளும் இடம்பெற்றமையால் அதிகமான பக்தர்கள் இவ்விழாவில் கலந்துகொள்ள முடிந்ததாக பக்தர்கள் தெரிவித்தனர்.

## அவசரகால சட்டம் தானாக இரத்தாகும்

இதற்கமைய, எதிர்வரும் 27ஆம் திகதியுடன் நிறைவடையும் குறித்த சட்டத்தை நீடிக்க வேண்டுமெனில் மீண்டும் நாடாளுமன்றின் ஒப்புதலைப் பெற வேண்டியது அவசியமானது.

எனினும் தற்போது 27ஆம் திகதி நாடாளுமன்றம் கூட்டுவதற்கான சந்தர்ப்பம் இல்லையென்பது தெரியவந்துள்ளது. எனவே, எதிர்வரும் 27ஆம் திகதிக்கு பின்னர் இந்த சட்டம் தானாக இரத்தாகும் நிலை உருவாகியுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

## சர்வதேசத்தை ஏமாற்றும் தந்திர விளையாட்டாகும்!

கடந்த ஜ"ன் 13 ஆம் திகதியன்று, இலங்கையின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் ஐ.நா மனித உரிமைச்சபை கூட்டத்தொடர் உரையில், 'ஐக்கிய நாடுகளின் ஒழுங்குமுறை எண்.1 இன் கீழ் 2012ம் ஆண்டு தடைவிதிக்கப்பட்ட தனிநபர்கள், அமைப்புக்கள் தொடர்பில் மதிப்பாய்வு செய்யப்படுவதோடு, தற்போது 318 தனிநபர்கள் மற்றும் 4 அமைப்புக்கள் தடைப்பட்டியலில் இருந்து நீக்க முன்மொழியப்பட்டுள்ளது என தெரிவித்திருந்தார்.

தற்போது, அடுத்த சில வாரங்களின் ஐ.நா மனித உரிமைச்சபைக் கூட்டத்தொடர் தொடங்க இருக்கின்ற நிலையில் மற்றுமொரு பட்டியல் வெளிவந்துள்ளது. இது சர்வதேசத்தினை ஏமாற்றும் வேடிக்கை இலக்க தந்திர விளையாட்டையே வெளிக்காட்டுகின்றது.

2014 ஆண்டில் இலங்கை அரசாங்கம், 424 தனிநபர்கள் மற்றும் 16 அமைப்புக்களை'பயங்கரவாத பட்டியலிட்டு' தடைவித்தது. 2015ம் ஆண்டில் ஆட்சிக்கு வந்த புதிய அரசாங்கம் மீண்டும் எண்ணிக்கை இலக்க வேடிக்கை விளையாட்டாக 8 அமைப்புக்களையும், 259 தனிபர்களையும் புனிதர்களாக்கி தனது தடைப் பட்டியலில் இருந்து நீக்கியது.

மீண்டும் 2021ல் புதிய அரசாங்கம் தனது எண்ணிக்கை இலக்க வேடிக்கை விளையாட்டை காட்டியது. 380 தனிநபர்களையும் மற்றும் 7 அமைப்புக்களையும் பயங்கரவாத தடைப்பட்டியலில் இட்டுக்கொண்டதென எமது முன்னைய அறிக்கையொனறில் குறிப்பிட்டிருந்தோம்.

தற்போது வெளிவந்துள்ள புதிய பட்டியலானது, இலங்கையின் வேடிக்கை இலக்க தந்திர விளையாட்டை மீளவும் தொடர்வதனை வெளிக்காட்டுகின்றது. குறிப்பாக இலங்கையின் இந்த நடத்தையானது 2012ம் ஆண்டு ஐ.நா ஒழுங்குமுறை இலக்கம் 1ஐ, இலங்கை துஸ்பிரயோகம் செய்வதனை நிரூபிக்கின்றது. ஐ.நாவின் நம்பகத்தன்மையையும் குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது.

இதேவேளை நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் மீது தொடரும் தடையானது, 'தமிழீழம்' என்ற கொள்கை, இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டிலும் உறுதியுடனும் செயற்படுகின்றோம் என்பதனை சான்று பகிர்வதாவே இலங்கையின் இந்த அச்சம் வெளிப்படுத்துகின்றது.

இலங்கைக்கு வெளியே 'தமிழீழத்துக்காக' நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் போன்றவர்கள் இன்னும் போராடும் செயற்பாட்டில் உள்ளனர் என்ற இலங்கை இராணுவத் தளபதியின் சமீபத்திய கருத்தும் இதனையே வெளிப்படுத்துகின்றதுஎன அரசியல் விவகாரங்களுக்கான அமைச்சு தெரிவித்துள்ளது.

## இதுவே காரணம்

கிரியெல்ல தெரிவித்தார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் இன்று (15) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## நம்பிக்கையான விடயம்

கொழும்பில் நேற்று (15) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அதேவேளை கோத்தபாய ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்த போது கட்டார் தொண்டு நிறுவனத்திற்கு விதிக்கப்பட்ட தடையும் நீக்கப்பட்டுள்ளதாகவும் இந்த தீர்மானங்கள் இலங்கை தொடர்பில் உலக நாடுகள் நம்பிக்கையுடன் நோக்கும் ஒன்று என அவர் தெரிவித்துள்ளார்.

அதன்படி, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்கள் செய்த விடயத்தில் மகிழ்ச்சியடைவதாகவும் அதேவேளை ஜனநாயகப் போராட்டம் சாதகமான விடயங்களை வழங்கியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், குணதாச அமரசேகர, மொஹமட் முஸம்மில், விமல் வீரவன்ச போன்றவர்கள் எப்போதும் தவறாகவே இருந்தனர். இவை இப்போது மாற வேண்டும். இவர்கள் தான் நாட்டை இன்று இருக்கும் நிலைக்கு கொண்டு வந்தவர்கள். இப்போது மாற வேண்டும். உலக அமைப்புகளுடன் நமது நாட்டைப் பற்றி பேசும் பொறுப்பை என்னால் ஏற்க முடியும்.

தமிழர்கள் மட்டுமல்ல சிங்களவர்களும் 25 இலட்சம் முஸ்லிம்களும் நாட்டிற்கு வெளியே வாழ்கின்றனர். இவர்கள் அனைவரும் புலம்பெயர் மக்கள். எனவே இலங்கை தேசிய பிரச்சினைக்கு ஒரு தீர்வை வழங்க வேண்டும் மற்றும் நிதிக் கட்டுப்பாட்டிற்கான அடித்தளத்தை உருவாக்க வேண்டும்.

அனைத்துக் கட்சித் திட்டத்தை நாங்கள் ஆதரிக்கிறோம் என்று கூறியுள்ளோம். எனவே, அந்த திட்டத்தை அரசு முன்வைக்க வேண்டும். அந்த முன்மொழிவுகள் இதுவரை முன்வைக்கப்படவில்லை எனவும் மக்கள் குற்றம் சுமத்துகின்றனர் எனவும் தெரிவித்தார்.

## கச்சத்தீவை மீட்பதே பாஜகவின் இலட்சியம்

அருகில் ராமேஸ்வரம் பகுதி உள்ளதால் அந்நாட்டு கடற்படையின் தாக்குதல், சிறைபிடிப்பு சம்பவங்களால் மீனவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

2017- 2018 இல் இலங்கை சிறையில் இருந்த மீனவர்கள், படகுகளை பிரதமர் மோடி மீட்டுள்ளார். தற்போது யாழ்ப்பாணத்தில் உள்ள 60 படகுகளை மீட்க பிரதமரிடம் வலியுறுத்துவோம்.

1974 இல் பிரதமராக இருந்த இந்திரா காந்தி தமது தவறான அணுகு முறையால் கச்சத்தீவை இலங்கைக்கு தாரை வார்த்து கொடுத்தார்.

தற்போது இலங்கைக்கு பயன்படாத நிலையில் கச்சத் தீவு உள்ளது.

எனவே, கச்சத்தீவை மீட்க பிரதமர் மோடியிடம் வலியுறுத்துவோம். அதை மீட்பதே தமிழக பா.ஜ.கவின் லட்சியம் என்றார்.

## கோட்டாபய தங்கியிருந்த சிங்கப்பூர் விடுதிக்கான கட்டணம்....

ஹோட்டலின் தங்குமிட கட்டணமாக செலவிடப்பட்ட 67 மில்லியன் ரூபாவை அவன்ட் கார்ட் நிறுவனத்தின் உரிமையாளர் நிஷ்ஷங்க சேனாதிபதி செலுத்தியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை, எவ்வாறாயினும், தற்போது தாய்லாந்தில் உள்ள முன்னாள் ஜனாதிபதி, அந்நாட்டிலுள்ள மத வழிபாட்டுத் தலங்களுக்குச் செல்வதற்கு தாய்லாந்து அரசாங்கத்திடம் அனுமதி கோரிய போதிலும், இதுவரை அனுமதி வழங்கப்படவில்லை என்பது தெரியவந்துள்ளது. முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தங்கியிருக்கும் ஹோட்டல் வளாகத்தை விட்டு வெளியே செல்ல வேண்டாம் என தாய்லாந்து அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளதாக தாய்லாந்தின் பேங்காக் போஸ்ட் செய்தித்தாள் அண்மையில் செய்தி வெளியிட்டிருந்தது என்பதுக் குறிப்பிடத்தக்கது.

## நாங்கள் வரவேற்கின்றோம்

பயங்கரவாதப் பட்டியலில் எஞ்சியிருக்கும் ஏனையவர்கள் கூட பயங்கரவாதத்துடன் தொடர்புடையவர்கள் என்பதற்கு எந்த ஆதாரமும் இல்லாததுடன் மேலும் பரிந்துரைக்கப்பட்ட நடைமுறையைப் பின்பற்றாமல் அவர்கள் அவ்வாறு பெயரிடப்பட்டுள்ளனர் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இப்பட்டியலில் பெயரிடப்பட்டிருக்க வேண்டியவர்கள் அல்லாத அனைத்து தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களின் மறுமதிப்பீடு மற்றும் தடை நீக்கம் செய்யும் இந்தச் செயல்முறையை குறைந்தபட்சம் தொடருமாறு நாங்கள் அரசை வலியுறுத்துகின்றோம்என்றார்.

## காரணம் என்ன? ; பாதுகாப்பு அமைச்சிடம் விமல் கேள்வி

6 புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மீதும், தனிநபர்கள் சிலர் மீதும் விதிக்கப்பட்டிருந்த தடை அரசால் நீக்கப்பட்டுள்ளது. அது தொடர்பாக ஊடகங்களிடம் கருத்துத் தெரிவித்த போதே விமல் வீரவன்ச மேற்கண்டவாறு வலியுறுத்தினார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

6 புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மீதான தடை எதற்காக நீக்கப்பட்டது? தடை விதிக்கப்பட்டமைக்குக் காரணங்கள் இருந்தன அல்லவா?. தேசிய பாதுகாப்பு அச்சுறுத்தல் என்று கூறியே இந்த 6 அமைப்புக்களுக்கும் தடை விதிக்கப்பட்டிருந்தது. அதனால் தடை நீக்கப்பட்டமைக்கான தெளிவான விளக்கத்தைப் பாதுகாப்பு அமைச்சு கூற வேண்டும்.

இப்போது அந்தத் தேசிய பாதுகாப்பு அச்சுறுத்தல் தணிந்துவிட்டதா? அப்படி இல்லாவிட்டால் தடை நீக்கப்பட்டமைக்கு உண்மையான காரணம் என்ன?. அதை அறிந்து கொள்வதற்கான உரிமை நாட்டு மக்களுக்கு உண்டு.

என்ன காரணத்துக்காக 6 புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மற்றும் முக்கிய தனிநபர்கள் மீதான தடை நீக்கப்பட்டது என்பதை அரசு தெளிவுபடுத்த வேண்டும். பாதுகாப்பு அமைச்சு தெளிவான அறிவிப்பை வெளியிட வேண்டும்.

தடை செய்யப்பட்டிருந்த அமைப்புக்கள் தங்களது நோக்கங்களைக் கைவிட்டிருக்க வேண்டும் அல்லது அந்த அமைப்புக்களால் தேசிய பாதுகாப்புக்கு ஏற்படும் பாதிப்பு இல்லாமல் போயிருக்க வேண்டும். இந்த இரண்டில் எது நடந்தது என்பதை அறியும் உரிமை மக்களுக்கு உள்ளது என்றார்.




நாள் தோறும் சுபீட்சம் மின்னிதழை பார்வையிட
www.supeedsam.com

# தமிழ் இனத்தின் போராட்டத்தை திரிவுபடுத்திய சில ஊடகங்களின் பிழையான வெளிப்படுத்தல்களே 30 வருடங்களுக்கு மேலாக யுத்தம்






**(எஸ்.சபேசன்)**

மக்களை பட்டினி போட்டதன் விளைவே கோத்தா ஓடியொழிக்க காரணம் மக்களின் பணத்தை மக்களுக்கு திருப்பிக்கொடுக்க கோத்தாபய நாட்டுக்கு வரவேண்டும் நிம்மதியாகவும்இ சுதந்திரமாகவும் தங்களின் மண்ணில் வாழ உரிமை கோரிய தமிழ் இனத்தின் போராட்டத்தை திரிவுபடுத்திய சில ஊடகங்களின் பிழையான வெளிப்படுத்தல்களே இந்த நாட்டில் 30 வருடங்களுக்கு மேலாக யுத்தம் என்ற ஒன்று ஏற்பட காரணமாக இருந்தது.

சிங்களவர்இ தமிழர்இ முஸ்லிம்இ கிறிஸ்தவர் என்ற எவ்வித பாகுபாடுகளுமின்றி இலங்கையர்களாக நாம் வாழ வேண்டும். 69 லட்சம் மக்களின் வாக்கை பெற்ற ஜனாதிபதி கோத்தாபய தன்னை நம்பிய அந்த மக்களை பட்டினி போட்டதன் விளைவாக அவர்கள் இட்ட சாபமும்இ பாதிக்கப்பட்ட மக்களின் பிராத்தனையுமே இன்று அவரை இந்த நிலைக்கு ஆட்கொண்டுள்ளது என கல்முனை மாநகர சபை உறுப்பினர் சந்திரசேகரம் ராஜன் தெரிவித்தார்.

பாதைகள், மின்சார வசதிகள், குடிநீர் இணைப்புக்கள் உட்பட எவ்வித அடிப்படை வசதிகளுமற்ற மிகப் பின்தங்கிய அம்பாறை வீரகெட திஸ்ஸபுர பிரதேசத்தில் வறுமை கோட்டுக்கு கீழ் வசிக்கும் பெரும்பான்மை சிங்கள மக்களுக்கு ʼரெலோசர்வதேச அமைப்பின் நமக்காக நாம்ʼ வேலைத்திட்டத்தின் கீழ் வீரகெட திஸ்ஸபுர ஸ்ரீ சுதர்சநாராம விகாரையில் வைத்து உலருணவுகள் வழங்கி வைக்கும் நிகழ்வு இன்று (14) கல்முனை மாநகர சபை உறுப்பினர் சந்திரசேகரம் ராஜனின் ஏற்பாட்டிலும் தலைமையிலும் நடைபெற்றது.

இந்நிகழ்விலையே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்தும் அங்கு உரையாற்றிய அவர்,


இலங்கையில் 30 வருடகால யுத்தம் இடம்பெற்றகாலத்தில் கூட இவ்வாறான பொருளாதார நெருக்கடிகளை கசந்தித்ததே இல்லை ஆனால் இன்று உண்பதற்கு உணவு இல்லை எரிபொருள் இல்லை அனைத்துக்கும் வரிசையில்நின்று பெற்றுக்கொள்ளும் நிலை உருவாகி இருக்கின்றது. இந்த நிலையை எப்போது நீங்கும் மூவின மக்களும் நிம்மதியாக உணவு உண்ணக் கூடிய சூழல் உருவாக்கப்பட வேண்டும்.

இலங்கையில் சீனாவுக்கு தனிநாடு கொடுக்கப்பட்டு இருக்கின்ற வேளையில் தமிழ் மக்களின் நீண்டகால அரசியல் பிரச்சினை நீக்கப்பட்டு மூவின மக்களும் சுதந்திரமாக வாழ்வதற்கான நிலை உருவாக்கப்படாமல் இருக்கின்றது.

இலங்கையில் பிறந்த கோத்தாபய இலங்கையில் வாழ முடியாமல் இன்று அங்கும் இங்கும் அலைந்து திரிகின்றார். அவர் மக்களிடமிருந்து கொள்ளையடித்த மக்களின் பணத்தை மக்களுக்காக செலவழித்து விட்டு அவரது சொந்த நாட்டுக்கு வந்து வாழ வேண்டும். அவரை யாருமே நாட்டை விட்டு ஓடும்படி கேட்கவில்லை. மாறாக அவரது ஜனாதிபதி பதவியை இராஜினாமா செய்யும் படிதான் மக்கள் போராட்டம் நடத்தினார்கள். அரசியல்வாதிகள் மக்களின் வரிப்பணத்தில் சொகுசாக வாழ்கிறார்கள். ஆனால் மக்கள் வரியையும் செலுத்திக்கொண்டு வாக்களித்து விட்டு இன்று வாழ்க்கையை தொலைத்துவிட்டு எல்லாவற்றுக்கும் வரிசையில் நிற்கிறார்கள். இந்த நிலை மாற கிராம மட்டத்திலிருந்து மாற்றம் வரவேண்டும் என்றார்.

இந்நிகழ்வில் கல்முனை சுமத்திராரம விகாரையின் விகாராதிபதி ரண்முத்துக்கல சங்கரத்ன தேரர், வீரகெட திஸ்ஸபுர ஸ்ரீ சுதர்சநாராம விகாராதிபதி திஸ்ஸானந்தபுர திஸ்ஸாநாம தேரர்இ கல்முனை மாநகர சபை உறுப்பினர் கதிரமலை செல்வராசாஇ உட்பட பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# மீண்டும் எகிறியது உணவு பொருட்களின் விலை!
## முட்டை 63 ருபா: கோழி இறைச்சி 1400 ருபாய்




**(காரைதீவு நிருபர் சகா)**

மக்களுக்கான உணவுப் பொருட்களின் விலை மீண்டும் உயர்வு அடைந்துள்ளது.

சமகால அம்பாறை மாவட்ட சந்தையில் மீன், மரக்கறி விலைகள் சொல்லொணாத அளவில் மக்கள் திண்டாடுகின்றனர். சில உணவுப் பொருட்களின் விலை இங்கே தரப்பட்டுள்ளன.

01 கிலோ அறக்குளா 4000/-,01 கிலோ தோறா 3500/-,01 கிலோ வெளவல் 3500/- 01 கிலோ பையா 2000/-,01 கிலோ கிளவல்லா 2500/-

01 கிலோ நெத்தலி 1600/-,01 கிலோ பாரை 3500/-,01 கிலோ சூடை 1500/-,01 கிலோ இறால் 2000/-,01 கிலோ செத்தல் 1200/-

01 கிலோ சுங்கான் 2000/-,01 கிலோ விரால் 2200/-,01 கிலோ செப்பலி 1000/-,01 கிலோ சாளை 1000/-, 01 கிலோ கோழி இறைச்சி 1400/-, 01 முட்டை 63/-,01கிலோ மாட்டிறைச்சி 2000/-,01 கிலோ ஆட்டிறைச்சி 3000/-

01 கிலோ உருளைக்கிழங்கு 600/-

01 கிலோ தக்காளி 600/-,01 கிலோ பச்சை மிளகாய் 800/-,01 கிலோ மரவள்ளிக்கிழங்கு 100/-,01 கிலோ வெண்டிக்காய் 350/-

01 கிலோ பயற்றங்காய் 350/-,01 கிலோ கோவா 400/-, 01 தேங்காய் 70 -90/-

# பேராத்துவெளி முஸ்லிம் மகா வித்தியாலய பழைய மாணவர்களால் கதிரைகள் வழங்கி வைப்பு





**(எப்.முபாரக் )**

கந்தளாய் தி/பேராத்துவெளி முஸ்லிம் மகா வித்தியாலய பழைய மாணவர்களால் அப்பாடசாலைக்கு கதிரைகள் நேற்று (15) வழங்கப்பட்டது.

கந்தளாய் தி/பேராத்துவெளி முஸ்லிம் மகா வித்தியாலயயத்தின் கேட்போர் கூட மண்டபத்தில் பாடசாலையின் அதிகமான நிகழ்வுகள் நாடாத்தப்பட்டுவருகின்றன.

இந்நிலையில் மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பொதுமக்களுக்கான பார்வையாளர்கள் கதிரைகள் இல்லாத சூழ்நிலையில் பாடசாலையின் மாணவர்களின் கதிரைகள் பாவிக்கப்பட்டு வந்த நிலையில் இதனை கருத்தில் கொண்டு பாடசாலையின் அதிபர் அவர்களின் கோிக்கைக்கமைவாக அப்பாடசாலையின் பழைய மாணவர்களான 2002 ஆண்டு மாணவர்கள் (OBA 2002 BATCH) இப் பாடசாலையின் மண்டபத்திற்கு தேவையான கதிரைகளை 2002 ம் ஆண்டு பழைய மாணவர்களின் ஒத்துழைப்புடன் அன்பழிப்பாக மாணவர்களின் கல்வி, கலாசாரம் மற்றும் விளையாட்டு துறையின் மேன்பாட்டினை கருதி இவை வழங்கிவைகப்பட்டது.

இது போன்ற சேவைகளை எதிர்காலத்தில் பாடசாலையின் நலன்கருதி வழங்கப்படும் எனவும் 2002 மாணவர்கள் தெரிவித்தார்கள்.

# கிழக்கு மாகாண எழுத்தாளர்களின் படைப்புக்களை வெளியீடு செய்துவைக்கும் விழா!





**(பைஷல் இஸ்மாயில்)**

கிழக்கு மாகாணத்திலுள்ள தமிழ், சிங்கள எழுத்தாளர்களின் படைப்புக்கள் மற்றும் அவர்களின் திறமைகளை வெளியுலகிற்கு கொண்டு வருகின்ற செயற்பாடுகளை மாகாண பண்பாட்டாலுவல்கள் திணைக்களம் கடந்த பல வருடங்களாக பாரிய பங்காற்றி வருகின்றதென கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள மாகாணப் பணிப்பாளர் (திருமதி) சரண்யா சுதர்சன் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் அச்சுருவாக்கப்பட்ட 4 வகை நூல்களை வெளியீட்டு வைக்கும் விழாவும், நூல்களை நூலாசிரியர்களிடம் கையளித்து வைக்கும் நிகழ்வும் (14) திருகோணமலை நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், கிழக்கு மாகாணத்தில் தமிழ், சிங்கள, முஸ்லிம் மூவின மக்களும் வாழுகின்ற மாகாணமாக இருக்கின்றது. அவர்களுக்குள் இருக்கின்ற படைப்புக்கள் மற்றும் கலை, கலாசார விடயங்களை வெளியுலகிற்கு கொண்டு செல்வதுடன் நின்றுவிடாமல் அவர்களையும், இளம் எழுத்தாளர்களையும் இன்னுமின்னும் ஊக்குவிக்கும் செயற்பாடுகளை மாகாண திணைக்களம் முன்னெடுத்து வருகின்றது.

மாகாணத்திலுள்ள படைப்பாளிகளினால் சமர்ப்பிக்கப்படுகின்ற படைப்புக்கள் யாவும் அதற்கான குழுவினர்களினால் பரிசீலிக்கப்பட்டு, அதில் திறமையான படைப்புக்கள் இனங்கண்டு இவ்வாறு வெளியீடு செய்து படைப்பாளிகளுக்கும் நூல்களை வழங்கி வருகின்றோம். இதன் மூலம் அவர்கள் இன்னும் பல படைப்புக்களை வெளிக்கொண்டு வருகின்ற ஊக்கத்தையும், இளம் எழுத்தாளர்களின் ஆர்வத்தையும் ஏற்படுத்துகின்றது என்றார்.

இதன்போது, அம்மாவுக்கு பிடித்த கனி என்ற சிறுவர் பாடல்கள் எழுதிய நூலாசிரியர் கலாபூசனம் பி.கனகரத்தினம், கொட்டியாரப்பற்று வன்னிபங்கள் என்ற வரலாறு எழுதிய நூலாசிரியர் வைத்திய கலாநிதி த.ஜீவராஜ், நவீன சீதை என்ற சிறுவர் கதைகள் எழுதிய நூலாசிரியர் கவிச்சுடர் (திருமதி) க.சிவரமணி, கடலோரப்பாதை என்ற சிறுவர் கதைகள் எழுதிய நூலாசிரியர் ஏ.எம்.முகைதீன் ஆகியோர்களினால் எழுதப்பட்ட நூல்கள் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் அச்சுருவாக்கப்பட்டு வெளியீடு செய்யப்பட்டதுடன், அவர்களுக்கு தலா 200 நூல்களையும் மாகாணப் பணிப்பாளர் (திருமதி) சரண்யாசுதர்சன் வழங்கி வைத்தார்.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்திற்கு மிக அண்மையில் நியமனம் பெற்ற மாகாணப் பணிப்பாளருக்கு இவ் விழாவின்போது பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# மாவட்ட அரசாங்க அதிபரின் சேவையை பாராட்டி கல்குடா மீடியா போரத்தினால் கௌரவம்





**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

மட்டக்களப்பு மாவட்ட தமிழ், முஸ்லிம் ஊடகவியலாளர்களுக்கான நலன்புரி விசேட வேலைத்திட்ட ஆரம்ப நிகழ்வு ஏறாவூர் நகர் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கல்குடா மீடியா போரத்தின் பணிப்பாளர் ஊடகவியலாளர் எம்.ரீ.எம்.பாரிஸ் தலைமையில் மிக சிறப்பாக இடம்பெற்றிருந்தது.

இதன் போது அரசாங்க அதிபரின் தலைமைத்துவத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும்

மனிதாபிமான மற்றும் மக்கள் நல அபிவிருத்தி பணி நடவடிக்கை குறிந்து நினைவுகூரப்பட்டதுடன், சிநேக பூர்வ மிக்க உயர்தரமான அரச சேவையினை இலகுவாக மக்களுக்கு கிடைக்கப்பெறும் வகையில் அர்ப்பணிப்புடன் சேவையாற்றி வரும், மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் கல்குடா மீடியா போரத்தினால் அதன் பணிப்பாளரும் ஊடகவியலாளருமான எம்.ரீ.எம்.பாரிஸ் அவர்களினால் மாவட்ட ஊடகவியலாளர்கள் சார்பில் பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# கிழக்கில் நான்கு வலயக்கல்விப் பணிப்பாளர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்!

**( காரைதீவு நிருபர் சகா)**

கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் கீழ் வெற்றிடமாக உள்ள, நான்கு வலயங்களுக்கான வலயக்கல்விப் பணிப்பாளர் பதவியை நிரப்ப விண்ணப்பங்களை கோரியுயுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கல்குடா மற்றும் மட்டக்களப்பு மத்தி வலயங்களுக்கும், அம்பாறை மாவட்டத்தில் சம்மாந்துறை மற்றும் திருக்கோவில் வலயங்களுக்கும் விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இலங்கை கல்வி நிர்வாக சேவையில் தரம் ஒன்றைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதி திகதி 12 .9. 2022 ஆகும்.

மேலதிக விவரங்கள் மற்றும் மாதிரி விண்ணப்ப படிவம் கிழக்கு மாகாண சபையின் www ep. Gov.lk என்ற இணையதளத்தில் பிரவேசித்து ministry of education என்ற பக்கத்திற்கு சென்று தரவிறக்கம் செய்து கொள்ள முடியும் என்று கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் டபிள்யூ டபிள்யூ ஜி. திசாநாயக்க தெரிவித்தார்.



வரலாற்று பிரசித்தி பெற்ற கதிர்காமம் கந்தன் ஆலய ஆடி வேல் விழா தீர்த்தோற்சவம் வெள்ளிக்கிழமையன்று மாணிக்க கங்கையில் இடம்பெற்ற போது...

படங்கள் காரைதீவு நிருபர் சகா

# பதவி உயர்விற்கு உறுதுணை அளிக்கும் கிழக்குப்பல்கலைக்கழகம்



(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

பல்வேறுபட்ட துறைகளில் பணியாற்றும் அதிகாரிகளின் , பதவி நிலை உயர்வுகளிற்கான ஆய்வுகளின் அடிப்படையிலான கல்வித்தகமைகளின் அத்தியாவசியம் மற்றும் அதிகரித்துவரும் தனிப்பட்ட உயர்கல்வித் தகமைகளின் தேவை என்பவற்றை உணர்ந்து கிழக்கு பல்கலைக்கழகமானது தனது புலமை சார் விருத்தி செயற்படுகளை விரிவாக்கிவருகின்றது.

இதன் ஓர் அங்கமாக கிழக்குப்பல்கலைக்கழகத்தின் சகல துறைகளிலும் பட்டமேற்படிப்புகள் ஒரேதடவையில் ஆரம்பிக்கப்படுகின்றன. இது பல்கலைக்கழக வரலாறில் ஓர் மைல்கல் என்பதோடு சுவாமி விபுலானந்த அழகியற்கற்கைகள் நிறுவனம் மற்றும் தொழிநுட்ப பீடம் என்பவற்றில் ஷகடடிடூ, கடஈ ஆரம்பிக்கப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

விசேடமாக நிர்வாகசேவை அதிகாரிகள் திணைக்கள தலைவர்கள் பணிப்பாளர்கள் ஆகியோரின் பதவி உயர்வுகளில் இக்கற்கை நெறிகள் மிகுந்த பயனளிக்கும் என்பது தெளிவு. இருபதிற்கும் மேற்படட பேராசிரியர்களும் அறுபதுக்கும் அதிகமான கலாநிதிகளும் அடங்குகின்ற திறமையான குழுவினர் இப்படமேற்படிப்பு கற்பித்தல் மற்றும் ஆய்வு நடவடிக்கையை வழிநடாத்துகின்றனர் என்பது முக்கிய அம்சமாகும். எனவே காலம் தாழ்த்தாமல் உங்கள் பிரதேசத்திலேயே கல்வித்தகைமையை உயர்த்திக்கொள்ளக்கூடிய இவ்வரிய வாய்ப்பை பயன்படுத்த அனைவரும் அழைக்கப்படுகின்றனர்.

# மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு இளைஞர்கள் தொலைபேசியில் செல்பி எடுப்பதற்கு முற்பட்டு மாட்டுடன் மோதி விபத்து

(எப்.முபாரக் 2022-08-15

மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு இளைஞர்கள் தொலைபேசியில் செல்பி எடுப்பதற்கு முற்பட்டு மாட்டுடன் மோதி விபத்துக்குள்ளானதில் படுகாயமடைந்த நிலையில் திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்விபத்து நேற்று முன்தினம் (14) மாலை இடம் பெற்றுள்ளது.

வவுனியாவிலிருந்து திருகோணமலை நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த இளைஞர்கள் இருவர் மோட்டார் சைக்கிளை செலுத்திக் கொண்டிருந்த வேளையில் கையடக்க தொலைபேசியில் செல்பி எடுப்பதற்கு முற்பட்டுள்ளனர்.



இந்நிலையில் குறுக்கே வந்த மாட்டுடன் மோட்டார் சைக்கிள் மோதியதாகவும் இதனை அடுத்து இருவரும் படுகாயம் அடைந்த நிலையில் மஹதிவுல்வெவ பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் வைத்தியசாலை பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

இவ்விபத்தில் வவுனியா-பூந்தோட்டம் பகுதியைச் சேர்ந்த 28 மட்டும் 30 வயது உடையவர்கள் படுகாயம் அடைந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும் விபத்து தொடர்பிலான விசாரணைகளை மொரவெவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சாய்ந்தமருதில் சிரமதானமும் மர நடுகை நிகழ்வும்





(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

சர்வதேச இளைஞர் தினத்தினை முன்னிட்டு SLYC இளைஞர் கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட சிரமதானமும் மர நடுகை நிகழ்வும் (12) சாய்ந்தமருதில் இடம்பெற்றது.

'இளைஞர் கழகங்களின் மூலமாக தன்னார்வ வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்' என்பதைக் கருப்பொருளாகக் கொண்டு இடம்பெற்ற இச் சிரமதான நிகழ்வானது, சாய்ந்தமருது கடற்கரை பூங்காக்கு பின்னுள்ள பகுதியிலும் மற்றும் மரம் நடுகை நிகழ்வானது சாய்ந்தமருது சதுக்கத்திலும், அதற்கு அண்மித்த பகுதியிலும், சாய்ந்தமருது இளைஞர் பயிற்சி நிலையத்திலும், SLYC இளைஞர் கழகத்தினுடைய தலைவர் எஸ்.ஏ. முஹம்மட் அஸ்லமின் ஒழுங்குபடுத்துதலில் கழகத்தினுடைய உயர்பீட உறுப்பினர்களின் ஆதரவுடன் நடைபெற்றது.

இந்நிகழ்வின் போது சாய்ந்தமருது பிரதேச இளைஞர் சேவை அதிகாரி எம்.எம். ஷமீலுல் இலாஹி, சாய்ந்தமருது இளைஞர் பயிற்சி நிலையத்தின் நிலையப் பொறுப்பதிகாரி எம்.ரீ.எம். ஹாரூன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இவ் வேலைத்திட்டத்தில் கழகத்தினுடைய உறுப்பினர்களான இளைஞர், யுவதிகளும், அத்துடன் மீனவர்களும் பங்கு கொண்டனர்.

குறிப்பாக, கழகத்தினுடைய ஏற்பாட்டில் நடைபெற்ற இவ் வேலைத்திட்டத்தில் கலந்து கொண்ட அனுபவம் வாய்ந்த மீனவர்கள் கழகத்திற்கு நன்றிகளைக் காணிக்கையாக்கினர்.

# மட்டக்களப்பு அருவி பெண்கள் வலையமைப்பினால் கிரான் பிரதேசத்தில் ஊட்டச்சத்து பால்மா வழங்கி வைப்பு





மட்டகளப்பு மாவட்டடத்தின் கோறளைபற்று தெற்கு கிரான் பிரதேச செயலக பிரிவானது கூடுதலான அடி நிலை கிராமங்களை கொண்ட பிரதேசமாகும்.

இப் பிரதேசத்தில் 7ம் மாத காலத்தினுள் 0-5 வயது 2567 பிள்ளைகள் உள்ளார்கள். இதில் ஓரளவான ஊட்டசத்து குறைவான பிள்ளைகள் 325 ஆகும்.

மிகவும் கூடுதலாக குறைபாடு உள்ள பிள்ளைகள் 67 பிள்ளைகள் ஆகும். தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக இக் கிராமத்தில் வாழும் மக்கள் மிகவும் கஷ்டத்தினை எதிர் நோக்குகின்றனர்.

இதனால் இங்கு பிறக்கும் குழந்தைகளில் மிகவும் ஊட்டச்சத்து குறைபாடு உள்ள பிள்ளைகள் கூடுதலாக காணப்படுகின்றனர்.

இதனைக் கருத்திற்கொண்டு மட்டகளப்பு மாவட்ட அருவி பெண்கள் வலையமைப்பானது மட்டக்களப்பு மாவட்ட பிராந்தியா சுகாதார சேவைகள் பணிமனையுடன் இணைந்து மட்டகளப்பு மாவட்ட அருவி பெண்கள் வலையமைப்பின் பணிப்பாளரும் சட்டத்தரணியுமான மயூரி ஜனன் தலைமையில் கிரான் பிரதேச செயலக பிரிவுட்குட்பட்ட 40 பிள்ளைகளுக்கு ஊட்டச்சத்து பால்மா வழங்கி வைக்கப் பட்டுள்ளது.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட சுகாதார சேவைகள் பணிமனையின் பிரதி பணிப்பாளர் நாகாலிங்கம் மயூரன், பிராந்திய பல் வைத்திய அதிகாரி, கிரான் பிரதேச சுகாதர வைத்திய அதிகாரி, பொது சுகாதார தாதி அதிகாரி, மேற்ப் பார்வை குடும்ப நல உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொண்டுள்ளனர்.

# மர்ஹூம் ரசீன் ஞாபகார்த்த கிண்ணத்தை பவர் பிளயர் 96 அணியினர் கைப்பற்றினர்

(யூ.கே. காலித்தீன்)

மர்ஹூம் ரசீன் ஞாபகார்த்த கூ10 மென்பந்து கிரிக்கட் சுற்றுப் போட்டி கல்முனை சாஹிராக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

சஹிரியன்ஸ் சுப்பர் ஹீரோஸ் 97 அணியின் தலைவர் அஞ்ஞுபின் காரியப்பர் தலைமையில் நடைபெற்ற சுற்றுப் போட்டியானது ஒரு அணிக்கு 11 பேர் கொண்ட பத்து ஓவா்கள் மட்டுப்படுத்தப்பட்ட மென்பந்து கிரிக்கட் சுற்றுப் போட்டின் சம்பியினாக பவர்பிளயர் 96 அணியினர் சம்பியன் கிண்ணத்தை சுவிகரித்து கொண்டனர்.

(14) காலையில் ஆரம்பமான மர்ஹூம் ரசீன் ஞாபகார்த்த கூ10 மென்பந்து கிரிக்கட் சுற்றுப் போட்டியில் சஹிரியன்ஸ் சுப்பர் ஹீரோஸ் 97 மற்றும் பவர் பிளயர் 96 அணியினர்களுக்கிடையிலான மூன்று தொடர்களைக் கொண்ட சுற்றுப் போட்டியானது மாலை வேலையில் நிறைவுக்கு வந்தது.

இதில் விளையாடிய பவர் பிளயர் 96 அணியினர் 1க்கு2 என்ற ரீதியில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தை சுவிகரித்துக் கொண்டது.



இறுதிச் சுற்றுப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றியீட்டிய பவர் பிளயர் 96 அணியின் தலைவர் ஏ.எம்.எம். நசீர்கான் மௌலான தனது அணியினரை களத்தடுப்பினை எடுத்ததற்கிணங்க சஹிரியன்ஸ் சுப்பர் ஹீரோஸ் 97 அணியினர் நிர்ணயிக்கப்பட்ட பந்து வீச்சு முடிவில் சகல விக்கட்டுக்களையும் இழந்து 51 ஓட்டங்களை மாத்திரம் பெற்றனர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பவர் பிளயர் 96 அணியினர் 07 ஓவர்கள் முடிவில் 02 விக்கட்டுக்களை மாத்திரம் இழந்து 53 ஓட்டங்களை பெற்று சம்பியன் கிண்ணத்தை சுவிகரித்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இறுதிச் சுற்றுப் போட்டியின் ஆட்ட நாயகனாக பவர் பிளயர் 96 அணியின் துடுப்பாட்ட வீரர் ஏ.எம். நஸ்வி தெரிவு செய்யப்பட்டதோடு சுற்றுப் போட்டியின் தொடர் ஆட்ட நாயகனாக சஹிரியன்ஸ் சுப்பர் ஹீரோஸ் 97 அணியின் துடுப்பாட்ட வீரர் யு. பாஹிம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இச்சுற்றுப் போட்டிக்கு மர்ஹூம் ரசீன் அவர்களின் சகோதரேரான சமூர்த்தி வங்கியின் உதவி முகாமையாரும், சிரேஸ்ட ஊடகவியளாலருமான ரியாத் ஏ. மஜிட், மர்ஹூம் ரசீன் அவர்களின் பிள்ளைகள் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகவும், கௌரவ விருந்தினர்களாக விக்டோரியஸ் அணியின் முன்னாள் சகலதுறை ஆட்டக்காரரும் சுவிஸ்லாந்தின் வதிவிட பிரதிநிதியுமான ஏ.எம்.எம்.பாறுக் மௌலான மற்றும் இலங்கை வங்கியின் கொழும்பு கிளையின் முகாமையாளரான ஏ.எம்.எம். முஸ்தக்கிம் மௌலான ஆகியோர் கலந்து கொண்டு கிண்ணங்களை வழங்கி வைத்தனர்.






மாத்தறை மாவட்டம் தெனியாய மாறை/ என்சல்வத்தை தமிழ் வித்தியாலயத்தில் மாணவர் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு அதிபர் திரு வே.உதயகுமார் தலைமையில் அண்மையில் (09/08/2022) இடம்பெற்ற பொழுது பிரதம அதிதியாக கலந்து கொண்ட வலயக்கல்வி பணிப்பாளர் அயல் பாடசாலை அதிபர்கள் அரச உத்தியோகத்தர்கள் முன்னாள் பாடசாலையின் அதிபர் உள்ளிட்ட அனைவரும் நிகழ்வில் கலந்து கொண்டிருப்பதை படங்களில் காணலாம்.

படம்:நாவலப்பிட்டி நிருபர்

# திறமைக்கு மகுடம் விருது வழங்கல்- ௨0௨௨




(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு கிரான்குளம் அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலய வருடாந்த திருச்சடங்கினை சிறப்பிக்கும் முகமாக ஆலய பரிபாலன சபையால் வருடாந்தம் ஊர் மாணவர்களை பாராட்டி ஊக்கப்படுத்தும் இன்னுமொரு கல்வி சமூகத்தை உருவாக்கும் திறமைக்கு மகுடம் விருது வழங்கல் விழா பத்திரகாளியம்மன் ஆலய வளாகத்தில் மிகச் சிறப்பாக இடம்பெற்றுள்ளது.

ஆலய தலைவர் கா.செந்தில்குமார் தலைமையில் இடம்பெற்ற நிகழ்விற்கு பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் கலந்து சிறப்பித்ததுடன் மாணவர்களுக்கான விருதுகளையும் வழங்கி வைத்துள்ளார்.

50 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு கௌரவிக்கப்பட்ட குறித்த நிகழ்விற்கு சிறப்பு அதிதியாக கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் மாகாண பணிப்பாளர் வை.கருணைநாதன் அவர்களும் ஆன்மீக அதிதியாக ஆலய பிரதம குரு சிவஸ்ரீ கா.ரதீஸ்குமார் குருக்களும் கலந்து சிறப்பித்தனர்.

இவ்விருதுக்கான பூரண அனுசரணையினை வில்லியசிங்கம் கரிகரன் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ப்ளூ நேவிஸ் சவால் கிண்ணம்





(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

கல்முனை லெஜன்ஸ் விளையாட்டு கழகம் நடாத்துகின்ற கூ20 தொடரின் குழு நிலை போட்டியில் சாய்ந்தமருது பிரைவ் லீடர்ஸ் விளையாட்டு கழகத்தை எதிர்த்தாடிய கல்முனை ஜிம்ஹானா விளையாட்டு கழகம் வெற்றிவாகை சூடியது.

கல்முனை சந்தாங்கேணி மைதானத்தில் (09) இடம்பெற்ற இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற ஜிம்ஹானா அணி முதலில் துடுப்பெடுத்தாடி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 7 விக்கட் இழப்பிற்கு 141 ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலளித்தாடியே சாய்ந்தமருது பிரேவ் லீடர்ஸ் விளையாட்டு கழகத்தினர் 20 ஓவர்களில் சகல விக்கட்டுக்களையும் இழந்து 125 ஓட்டங்களைப் பெற்றனர்.

இதன் மூலம் ஜிம்ஹானா அணி 16 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக பிரபல வர்த்தகரும் அஇஅ குநூ மீகு நிறுவனத்தின் உரிமையாளருமான ஏ.சி. அலி சப்ரி கலந்து சிறப்பித்து, போட்டியின் ஆட்ட நாயகனுக்கு விருதும் வழங்கி கௌரவித்தார்.

# உதவி கல்வி பணிப்பாளர் நைருஸ் கானுக்கு பிரியாவிடை




( காரைதீவு நிருபர் சகா)

திருக்கோவில் வலயத்தில் உதவிக் கல்விப் பணிப்பாளராக பணியாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்ற நைரூஸ்கான் ஹிதாயத்துல்லா அவர்களுக்கு பிரியாவிடை வைபவம் நேற்று நடைபெற்றது.

திருக்கோவில் வலயக்கல்விப் பணிப்பாளர் வை. ஜெயச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கல்வி சார் உத்தியோகத்தர்கள் அதிபர்கள் கலந்து கொண்டு கௌரவமளித்தார்கள்.

உதவி கல்வி பணிப்பாளர் நைரூஸ்கான் சம்மாந்துறை வலய த்திற்கு இடமாற்றம் பெற்றுச் சென்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

# வாழைச்சேனை சக்சஸ் முன்பள்ளியில் சிறார்களின் பற்சுத்தம், போசாக்கு பரிசோதனை




(எஸ்.எஸ். அமிர்தகழியான்)

மாணவர்களின் கற்றல் மற்றும் கற்பித்தலோடு மட்டும் மட்டுப்படுத்திக் கொள்ளாமல் கற்கின்ற சிறார்களின் சுகாதாரத்தைப் பேணுவதற்கும் அவர்களது போஷாக்கு மட்டத்தை கண்காணிக்கும் வகையிலு வாழைச்சேனை சக்சஸ் முன்பள்ளி நிருவாகத்தினர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

அந்த வகையில், பற்சுத்தம், போசாக்கு ஆகியவற்றை பரிசோதிப்பதற்கு கோறளைப்பற்று மத்தி, வாழைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பாடசாலை பற்சிகிச்சையாளர் திருமதி எஸ்.எப். ஸபாயா, மருத்துவத்தாதி திருமதி பி.வசந்தி ஆகியோர் (12.08.2022) வாழைச்சேனை சக்சஸ் முன்பள்ளிக்கு வருகை தந்திருந்தனர்.

இதன் போது, பற்சுத்தம் பற்றியும் பற்களை துலக்கும் முறை பற்றியும் உத்தியோகத்தர்களால் முன்பள்ளி மாணவர்களுக்கு கற்பிக்கப்பட்டதுடன், முன்பள்ளி மாணவர்களில் பற்களும் பரிசோதிக்கப்பட்டன.



# மட்டக்களப்பு தாந்தாமலை ஸ்ரீ முருகன் ஆலய உற்சவத்தின் இறுதிநாள் தீர்த்தோற்சவம்!!

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)





ஈழவள திருநாட்டின் புகழ் பெற்ற முருகன் ஆலயங்களில் ஒன்றாக விளங்கும் மட்டக் களப்பு தாந்தாமலை ஸ்ரீ முருகன் ஆலய உற் சவத்தின் இறுதிநாள் தீர்த்தோற்சவ நிகழ்வு மிகச் சிறப்பாக இடம்பெற்றுள்ளது.

இலங்கை திருநாட்டின் இயற்கை எழில் கொஞ்கம் கிழக்கு மாகாணத்தில் மீனனிங்கள் கவிபாடும் மட்டக்களப்பில் வந்தோரை வாவென்று அழைக்கும் மக்கள் வாழ்கின்ற தேசம் படுவான்கரையில் மண்முனை தென் மேற்கு பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட அம்பாரை மாவட்டத்தின் எல்லையிலும் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் இருந்து மைல் கல்தொலைவில் காடும் காடுசார்ந்த பிரதேசமும், மலையும் மலைசார்ந்த பிரதேசமும், வயலும் வயல் சார்ந்த பிரதேச நிலமும் சூழ அமையப்பெற்றுள்ள இடமே தாந்தாமலை. அங்கு எழுந்தருளி அருள் மழை சொரியும் முருகப் பெருமானின் கோயில் வரலாற்றுத் தொன்மை வாய்ந்ததாக திகழ்ந்துவருகின்றது.

இவ்வாலயத்தின் வரலாற்று கூத்திகள் - சேனன், உலகநாச்சி, ஆடகசௌந்தரி, குளக் கோட்டன் ஆகியோருடன் தொடர்புபட்டு நிற்பதை வரலாற்றுச் சான்றுகளும், கர்ணபரம்பரை கதைகளும் சான்று பகிர்கின்றது.

ஆதியில் ஆதிதிராவிடர்களின் மரபு வழிபாட்டுடன் தொடர்புடையதாக கொக்கட்டிச்சோலை தான்தோன்றிஸ்வார் வழிபாடும் திறந்த வெளிக்கோயிலாக தாந்தாமலையும் இருந்ததாக கர்ண பரம்பரை கதைகளுடாக அறியமுடிகின்றது.

தாந்தாமலையின் உச்சியில் சிலந்தி மரம் ஒன்றும் அதடியில் பிள்ளையார் ஆலயம் ஒன்றும் இருந்தன என்பதை அறியக்கூடியதாகவுள்ளதோடு கதிர்காம பாதயாத்திரியர்களின் வழிபாட்டு தலமாக தாந்தாமலை இருந்துள்ளது. ஆடகசௌந்தரி ஆட்சி காலத்தில் தாந்தாமலை ஆலயத்தை தரிசித்ததாகவும் மாளிகை அமைத்து தங்கி இருந்ததாகவும் கர்ண பரம்பரைகதைகள் கூறுகின்றது. இதற்குச் சான்றாக இன்றும் இராசதானி அமைந்திருந்த தடயங்களும் கற்றூண்கள் மற்றும் சிற்ப வேலைப்பாடுகள் சிதைந்து அழிந்த கற்களும் காணக்கிடைக்கின்றன. இப்பிரதேசம் மலையும் மலைசார்ந்த இடமும். வயலும் வயல் சார்ந்த இடமுமாக உள்ளதால் அதிகளவான மக்கள் மழையை நம்பி விவசாயம் செய்கின்றனர். அதனடிப்படையில் மழை இல்லாத காலத்தில் மலைப்பிள்ளையாருக்கு பொங்கல் வைத்து பூசை செய்தால் மழை பொழிந்து இன்புற்ற வரலாறுகள் உள்ளதுடன் அது இன்றும் வழக்கத்தில் உள்ளதை காணமுடிகின்றது.

கடந்த 22.07.2022 திகதி வெள்ளிக்கிழமை திருக்கொடியேற்றலுடன் ஆரம்பமாகிய ஆலய வருடாந்த மகோற்சவமானது தொடர்ச்சியாக கிராம ரீதியான திருவிழாக்கள் நடைபெற்று, 12.08.2022 திகதி வெள்ளிக்கிழமை அதிகாலை 5.00 மணிக்கு முருகப்பெருமானின் புண்ணிய தீர்தோற்சவம் நாடு பூராகவும் இருந்து வருகைதந்த பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் புடைசூழ மிகச்சிறப்பாக இடம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## காரைதீவு பிரதான வீதியில் சுவாமி விபுலானந்த அடிகளாரின் சிலை திறந்து வைப்பு!









( காரைதீவு நிருபர் சகா)

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் மற்றுமொரு சிலை, அவர் அவதரித்த காரைதீவில் பிரதான வீதியில் திறந்து வைக்கப்பட்டது.

விபுலாநந்தர் ஞாபகார்த்தப் பணி மன்றத்தினரின் ஏற்பாட்டில், இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையோடு கண்ணகை அம்மன் ஆலய முச்சந்தியில் நிறுவப்பட்ட அடிகளாரின் மார்பளவிலான சிலையை

மட்டக்களப்பு, இராமகிருஷ்ண மிஷன், உதவிப் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தஜீ மஹராஜ் திருமுன்னிலை அதிதியாக கலந்து கொண்டு தலைவர் வெ.ஜெயநாதன் தலைமையில் , சுபவேளையில் திறந்து வைத்தார்.

சுவாமிகளின் ''வெள்ளை நிற மல்லிகையோ.. ''என்ற பாடல் இசைக்க ,அதிதிகளால் சுவாமிகளின் திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டன.

இது சுவாமி பிறந்த காரைதீவு மண்ணில் நிறுவப்படும் ஐந்தாவது சிலையாகும்.இச் சிலையை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் அருளானந்தம் உமா மகேஸ்வரன் வழங்கி இருந்தார்.

நிகழ்வில் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம்ஜெகதீஸன், காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ண பிள்ளை ஜெயசிறில் ,பிரதேச செயலாளர் சிவ.ஜெகராஜன் ,, திருக்கோவில் வலய பிரதி கல்வி பணிப்பாளர் சோ.ஸூரநுதன், சம்மாந் துறை வலய உதவி கல்வி பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா ஆகியோருள்ளிட்ட பல பிரமுகர்கள் கலந்து சிறப்பித்தனர்.

சுவாமி விபுலானந்தர் அடிகளாரின் திருவுருவப் படங்கள் தாங்கி மாணவர்கள் ஊர்வலமாக சென்றனர்.

## முச்சக்கர வண்டி சாரதிகள் சங்க தலைவர் காலமானார்

(தலவாக்கலை பி.கேதீஸ்)



தலவாக்கலை கொத்மலை வீதி எப்பார்க் முச்சக்கர வண்டி சாரதிகள் சங்க தலைவரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலவாக்கலை பிரதேச முன்னாள் அமைப்பாளருமான பெருமாள் சசிகுமார் தனது (46) வயதில் (14) நேற்று முன் தினம் காலமானார்.

மூன்று பிள்ளைகளின் தந்தையான இவர் (14) நேற்று முன் தினம் பிற்பகல் திடீர் சுகயீனமுற்ற நிலையில் அம்புலன்ஸ் வண்டியூடாக நுவரெலியா பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் காலமானார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக தலவாக்கலை ஹொலிரூட் இலக்கம் 18 இல் உள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டுள்ளதோடு இறுதி கிரியைகள் நாளை (17) புதன்கிழமை காலை 10 மணியளவில் இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கள்ளவியாழையில் பாலம் அமையுமா?



( காரைதீவு நிருபர் சகா)

கதிர்காமத்துக்கான காட்டுப்பாதையில் மத்தியில் அமைந்துள்ள கள்ளவியாழை எனுமிடத்தில் குறுக்காக ஓடும் ஆற்றைக் கடப்பதற்கு அடியார்கள் சிரமப்படுவதுண்டு.

ஒவ்வொரு வருடமும் இந்த ஆற்றை கடக்கும் போது பலர் தவறி விழுந்ததும் உண்டு. அவர்களது உடைமைகள் ஆற்றில் அடித்துச் செல்லப்பட்டதும் காணாமல் போனதும் வரலாறு ஆகும்.

இந்த பாதையால் பயணிப்போர் ஆக ஒரிரு கம்புகளின் மேலால் கத்தியின் மேல் நடப்பது போன்று கவனமாக நடக்க வேண்டி இருக்கிறது. குழந்தைகள் மற்றும் வயோதிபர்கள் பெரும்பாலும் தவறி ஆற்றுக்குள் விழுந்து விடுகின்ற துர்ப்பாக்கிய நிலைமையும் காணப்படுகிறது. ஒவ்வொரு வருடமும் ஆயிரக்கணக்கான அடியார்கள் இக் கம்புகளின் மேலால் பயத்துடன் சுமைகளோடு நடப்பதுண்டு.

எனவே அப் பகுதிக்கு பொறுப்பான ஜீவராசிகள் திணைக்களத்தினர் இதற்கு ஒரு சிறியதொரு பாலமாவது இட வேண்டும் என்று அடியார்கள் வேண்டுகோள் விடுகின்றனர்.

## மியன்டாட் இளையோர் அணிக்கு புதிய சீருடை அறிமுகம்

(எம்.என்.எம்.அப்ராஸ்)



சாயந்தமருது மியண்டாட் விளையாட்டுக்கழகத்தின் இளையோர் அணி வீரா்களுக்காக புதிய சீருடை அறிமுகம் அண்மையில் இடம்பெற்றது

நிந்தவூர் -அட்டப்பளம் றினோஸ் றைஸ் மில் வளாகத்தில் கடந்த(13) சனிக்கழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பகல் போசன விருந்துபசாரத்தின் போது கல்முனை பிராந்தியத்தில் காணப்படுகின்ற கழகங்களுக்கு முன்னுதாரனமாக திகழும் மியன்டாட் விளையாட்டுக்கழகத்தினால் பிரதாந்தியத்தில் எக்கழகமும் இதுவரை செய்திடாத முறையில் முதல் முதலாக இளையோர் அணி வீரா்களுக்காக பாஹிம் அலுமினியம் கிளாஸ் சென்டரின் (Fahim Aluminium Class Center )பிரதான அனுசரணையுடன் மற்றும் கல்முனை பசால் ஸ்டோர்ஸ் (Fazal Stores Kalmunai) கல்முனை ஹிசாம் டிரேடிங் (Hisaam Trading Kalmunai),கே.எல்.எம்.பர்சாத் ஆகியோரின் இனைஅனுசரனையில் இளையோர் அணி வீரா்களுக்கான புதிய சீருடை அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

இன் நிகழ்வில் கழகத்தின் தலைவர் ஏ.பாயிஸ், கழகத்தின் தவிசாளர் எம்.ஜே. எம்.காலித் முகாமைத்துவ உறுப்பினர் பொரியியலாளர் எம்.எல்.நவாஸ்,

முகாமைத்துவ உறுப்பினர் ஆர்.எம்.ரினோஸ் முகாமைத்துவ உறுப்பினர் ஏ.எல்.ஏ.நாஸர், செயலாளர் யூ.கே. ஜவாஹார், பிரதித்தலைவர் யூ.எல். எம்.பாஹிம், ஆலோசனை சபைத்தலைவர் எஸ்.எம்.அமீர், ஆலோசனை சபை உறுப்பினர்களான எம்.ஏ.ஜனூஸர், எஸ்.எம்.உஸ்மான், உயர்பீட உறுப்பினர்களான எம்.டி.பிர்தௌஸ், ஏ.எம்.ஜஹான், ஏ. நியாஸ், ஏ. ஆர்.எம். பஸ்மீர், ஏ.எல்.எம்.நியாஸ், ஏ.பி.எம். பைஸால், எஸ்.எல்.நிஸார், முகாமையாளர் யூ.எல்.பரீட் ஆகியோர் கலந்து சிறப்பித்திருந்தார்கள்.

# இலங்கையின் ஒற்றையாட்சி முறைமை அடிப்படைவாத அரசியல் 74 ஆண்டுகளில் படுதோல்வி, புதிய ஆட்சிமுறைமையே வெற்றிக்கான தேவை



ஜி.ஸ்ரீநேசன்,
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர், மட்டக்களப்பு

இலங்கை சுதந்திரமடைந்த நாளில் இருந்து 74 ஆண்டுகளாகப் பின்பற்றப்பட்டு வந்த மத்தியரசிடம் அதிகாரம் குவிந்துள்ள ஒற்றையாட்சி முறையும்,இனவாத மதவாத சிங்கள பௌத்த மேலாதிக்க அரசியலும் தோல்வி அடைந்துள்ளது.நாடு சுதந்திரம் அடைந்தபோது ஆசியாவில் பொருளாதார பலத்தில் மூன்றாவது நிலையில் இலங்கை காணப்பட்டது. 74 ஆண்டுகள் ஆட்சி செய்த சிங்களத் தலைவர்கள் ஆசியாவில் நாட்டின் பொருளாதாரத்தை ஏறத்தாழ கடைசி நிலைக்குத் தள்ளியுள்ளனர். ஆசியாவில் எரிபொருளுக்காக மாதக்கணக்கில் மக்கள் வரிசையில் நின்ற ஒரே நாடு இலங்கையாகும்.உலகில் கூட இப்படியாக எந்த நாடும் இல்லை. நாட்டின் தேசிய ஐக்கியம்,பல்வகைக் கலாசார நோக்கு,பொருளாதாரம்,அரசியல், சர்வதேச உறவு போன்ற அனைத்தும் தோல்வியடைந்துள்ளன. ஆகவே ஏற்கனவே பின்பற்றிய ஒற்றையாட்சி முறைமை,இனவாத மதவாத அரசியல் செயற்பாடுகள் அனைத்தும் மாற்றப்பட வேண்டும்.முற்போக்கான அரசியல் சமூக பொருளாதார பயணத்திற்காக ஒற்றையாட்சி முறைமை,பாரபட்ச அரசியல் செயற்பாடுகள் அனைத்தும் மாற்றப்பட வேண்டும்.2023 ஆம் ஆண்டு இலங்கையின் சுதந்திர தினம் என்பது முக்கால் நூற்றாண்டுக்கான பவள விழாவாக அமையப்போகின்றது. 75 வது சுதந்திர தினத்திலும் எமது நாடு தோல்வியடைந்த ஒற்றையாட்சி முறைமை,அடிப்படைவாத அரசியல் செயற்பாடுகளோடு நகர்ந்தால் நமது நாடு உருப்படவே முடியாது.பேரளவுக்கு சுதந்திர தினம்,வெசாத்தினம்,யுத்த வெற்றி தினம் என்று கொண்டாட்டம் நடாத்தி மக்களைத் திண்டாட்டத்தினுள் தள்ளி விடுகின்ற வழக்கமான செயற்பாடுகளே நடைபெறும். இனப்பெருமை, மதப்பெருமை பேசிப்பேசி ஈனத்தனமான அரசியலைத்தான் ஆட்சியாளர்கள் செய்து வருகின்றனர். இனமத வாதங்களால் சமூகங்கள் பிரிக்கப்பட்டு மூன்று துருவங்களாக்கப்பட்டுள்ளன.தேசிய ஒற்றுமை சிதைக்கப்பட்டுள்ளது.நாடு கடலால் மட்டுமல்ல கடனாலும் சூழப்பட்டுள்ளது.

நாட்டின் சொத்துகள் விற்கப்பட்டுள்ளன.60 சதவீதம் வரை பணவீக்கம் உயர்ந்துள்ளது.நமது நாடு 6200 கோடி டொலர்கள் கடன்களைச் செலுத்த வேண்டியுள்ளது. ஒவ்வொரு மணித்தியாலமும் 32 இலங்கையர் குறிப்பாக இளைஞர்கள் நாட்டை விட்டு வெளியேறிக்கொண்டுள்ளனர்.1600 இற்கு மேற்பட்ட மருத்துவர்கள் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளதாகத் தகவல் கூறுகின்றது.மின்சாரக்கட்டணம் 70 சதவீதத்தால் அதிகரிக்கவுள்ளது.நீர்ககட்டணமும் அதிகரிக்கவுள்ளது.ஏற்கனவே எரிபொருட்கள்,ஏனைய அனைத்துப் பொருட்களினதும் விலைகள் உச்சமாக ஏறியுள்ளன.ஒரு அமெரிக்க டொலருக்கான ரூபாவின் பெறுமதி 350 ரூபாக உயர்ந்துள்ளது. அதாவது ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்துள்ளது.டொலரின் கையிருப்பு மறைகணியமாகியுள்ளது. சர்வதேச நாணய நிதியம்,உலக வங்கி, பிறநாடுகள் நமது நாட்டுக்கு கடன் வழங்க மறுக்கின்றன.இலங்கைக்கு வருகின்ற வந்துள்ள சீன உளவுக் கப்பல்,பாகிஸ்தானிய யுத்தக் கப்பல் இந்து சமுத்திர அமைதிக்கு அச்சுறுத்தல் விடுக்கின்றன.இந்தியா - இலங்கை இடையிலான நட்புறவு பாதிக்கப்படுகின்றன.

**பவளவிழா நாயகன் ரணில் பூச்சியத்தில் இருந்து இராச்சிய நாயகனாகியுள்ளார். அந்த நாயகன் உலக வரலாற்றிலும் நிலையான நாயகனாக மாறவேண்டுமாயின், முதலில் தேசிய இனப்பிரச்சினைக்கு நியாயமான நிலையான தீர்வைக் காணவேண்டும். அதனைச்செய்தால் சொந்த நாட்டுப்புலம் பெயர்ந்த உறவுகளைக்கொண்டே நாட்டை அபிவிருத்தியடைந்த நாடாக மாற்றமுடியும். அல்லாதுவிட்டால்,இலங்கை வரலாற்றில் எட்டாவது ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க இருந்தார் என்ற பதிவு மட்டுமே மிஞ்சும்.ஜெயவர்தனாவில் இருந்து கோத்தபாய வரை நாட்டை யுத்தத்திற்குப் பலியாக்கி குட்டிச்சுவராக்கியவர்கள் என்ற பதிவுக்குரியவர்களாக இருந்தார்களேயொழிய நாட்டில் கூறுமளவுக்கு எதனையும் சாதிக்கவில்லை. இந்தப்படிப்பினையை ஜனாதபதி ரணில் எந்தளவுக்குக் கையாளப்போகின்றார்**



ஊழல் மோசடிகள் கையூட்டுகளுக்கு மட்டும் பஞ்சமில்லை.கோத்தாவின் வரிவிலக்குகளால் நாடு 60,000 கோடி ரூபாய்களை இழந்துள்ளது. சீனி இறக்குமதியால் நாடு 1600 கோடி ரூபாய்களை நம்நாடு இழந்துள்ளது.புத்தியாளர்கள் விரும்பாத நாடாக இலங்கை மாறியுள்ளது. இவைதான் நாட்டின் ஆட்சியாளர்களினது எதிர்மறையான சாதனைகளாக உள்ளன.

ஆட்சியாளர்கள்,அண்டிப் பிழைப்பவர்கள் கோடீஸ்வரர்களாக, பில்லியனர்களாக பணத்தில் மிதக்கிறார்கள்.மக்கள் வறுமையில் மூழ்கிக் கொண்டிருக்கிறார்கள். இவைதான் நாட்டின் நிதர்சன உண்மைகளாகும்.எனவே முற்போக்கான கூட்டாட்சி முறை, இனமத சார்பற்ற அரசியல் முறைமை, அறிவியல் சார்ந்த ஆய்வு முறைகள், சுயதேவைக்கான உற்பத்திகள், தற்சார்புப் பொருளாதாரம், சிறப்பான கல்வி முறை,ஆரோக்கியமான உடல் நலத்துறை, உடன்பாடான வெளியுறவுக்கொள்கை இவற்றை



ஆட்சியாளர்களும்,மக்களும் இப்போதே பற்றிக்கொள்ள வேண்டும். பவள விழாவுக்கான 75 வது சுதந்திர நாளிலாவது முற்போக்கான புதிய பாதையில் பயணிக்கத் தலைவர்கள் தயாராகுவார்களா? இல்லை இதுவரை நாட்டை நாசமாக்கிய பாதைகளில்தான் செல்லப் போகின்றார்களா? என்பதுதான் முற்போக்கான சிந்னையாளர்களதும்,அறவழிப்போராளிகளதும் கேள்விகளாகும்.

தேசிய இனப்பிரச்சினை முறையாகத் தீர்க்கப்பட்டால் புலம் பெயர்ந்த உறவுகள் தமது புத்திசாதுர்யத்தாலும் பொருளாதார பலத்தாலும் இந்த நாட்டை வளர்ச்சிப் பாதையில் கொண்டு சென்று அபிவிருத்தி அடையச் செய்வர்.சொந்த நாட்டவர்களைக் கொண்டு தாய்நாட்டை அபிவிருத்தி செய்வது அறிவுபூர்வமான கௌரவமான செயற்பாடாகும். நாட்டின் வளங்களை அந்நிய நாடுகளுக்கு விற்று நாட்டின் இறைமையையும்,பாதுகாப்பையும் இழப்பது முட்டாள்த்தனமான பிற்போக்கான செயற்பாடாகும். இதுவரை ஆட்சியாளர்கள் பிற்போக்கு பாதையில் பயணித்து நாட்டை நாசமாக்கியுள்ளனர்.75வது சுதந்திர தினத்திலாவது ஜனாதிபதி நாட்டை முற்போக்கான பாதையில் கொண்டு செல்வாரா? என்பதுதான் முற்போக்குவாதிகளின் கேள்வியாகும். ஜெயவர்த்தனா,பிரேமதாச, விஜயதுங்க,சந்திரிக்கா,மகிந்த கோத்தா என்கின்ற ஜனாதிபதிகளின் ஆட்சி முறையினை பாராளுமன்றத்தில் இருந்து கொண்டு நன்கு அவதானித்த ஜனாதிபதி ரணில் அத்தலைவர்களின் தவறுகள் தப்புகளைத் தவிர்த்து திருத்தமான பாதையில் நாட்டையும் மக்களையும் கொண்டு செல்ல திடசங்கற்பம் கொள்ள வேண்டும்.ஜனாதிபதி ரணில் அவர்கள் தனது அனுபவத்தைக்கொண்டு சிறப்பான பாதையில் பயணிக்க விரும்பினாலும் தற்போதைய பாராளுமன்றத்திலுள்ள ராஜபக்சக்கள்,பெரும்பான்மை மொட்டுக்கட்சியினர் விடமாட்டார்கள்.ஆயின் விரைவாகப் பாராளுமன்றத்தைக் கலைத்து தேர்தலை நடாத்த வேண்டிய கட்டாய தேவையுள்ளது.அதற்கு முன்பாக பிரித்தாளும் தந்திரத்தை ரணில் கைவிடவேண்டும்.பிரிந்து நிற்கின்ற ஐக்கியமக்கள்சக்தி,ஐக்கிய தேசியக்கட்சி இரண்டும் இணையவேண்டும்.அது நடந்தால் அடுத்து வரும் தேர்தலில் இணையும் கட்சிகள் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்ற வாய்ப்புள்ளது.அதனையடுத்து சட்டமன்றப்பலம், நிறைவேற்றுத்துறைப்பலம் இரண்டையும் பிரயோகித்து புரையோடிப்போயுள்ள தேசிய இனப்பிரச்சினை உட்பட ஏனைய பிரச்சினைகளுக்கும் தீர்வுகளைக் கண்டறிய வேண்டும்.ஜனாதிபதி ரணிலின் பதவிக்காலம் ஆக இரண்டரை ஆண்டுகள்தான் உள்ளதென்பதை மறக்கக்கூடாது.வெள்ளிவிழா வயதில் அரசியலுக்கு வந்து 28 வயதில் பாராளுமன்றம் பிரவேசித்த ரணில் கடந்த 45 ஆண்டுகளாக பாராளுமன்றத்தினுள்ளே தனது வாணாட்களைக் கழித்துள்ளார்.இப்போது அவர் வயதில் பவளவிழாவை நெருங்கும் காலத்தில், நாடும் சுதந்திரம் பெற்று பவளவிழாவை அடுத்த ஆண்டில் கொண்டாடவுள்ளது.

பவளவிழா நாயகன் ரணில் பூச்சியத்தில் இருந்து இராச்சிய நாயகனாகியுள்ளார்.அந்த நாயகன் உலக வரலாற்றிலும் நிலையான நாயகனாக மாறவேண்டுமாயின்,முதலில் தேசிய இனப்பிரச்சினைக்கு நியாயமான நிலையான தீர்வைக்காண வேண்டும்.அதனைச்செய்தால் சொந்த நாட்டுப்புலம் பெயர்ந்த உறவுகளைக்கொண்டே நாட்டை அபிவிருத்தியடைந்த நாடாக மாற்றமுடியும். அல்லாதுவிட்டால்,இலங்கை வரலாற்றில் எட்டாவது ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க இருந்தார் என்ற பதிவு மட்டுமே மிஞ்சும்.ஜெயவர்தனாவில் இருந்து கோத்தபாய வரை நாட்டை யுத்தத்திற்குப் பலியாக்கி குட்டிச்சுவராக்கியவர்கள் என்ற பதிவுக்குரியவர்களாக இருந்தார்களேயொழிய நாட்டில் கூறுமளவுக்கு எதனையும் சாதிக்கவில்லை.இந்தப்படிப்பினையை ஜனாதபதி ரணில் எந்தளவுக்குக் கையாளப்போகின்றார் என்று பார்ப்போம்.

# தப்பிப்பிழைப்பார்களா?



ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களில் அதன் தலைவர் ரவூப் ஹக்கீம் அவர்களைத்தவிர்த்து கடந்த ஜனாதிபதி கோட்டாபாய அரசாங்கத்திற்கு ஆதரவு கொடுத்ததன் விளைவாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி தனது பாராளுமன்ற உறுப்பினர்களுக்கெதிராக ஒழுக்காற்று விசாரணைகளை மேற்கொண்டிருந்தது.

அதன் தொடரில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்ற நஸீர் அஹமட் கடந்த கோட்டாபாய அரசாங்கத்தில் அமைச்சரவை அமைச்சராக நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து கட்சியிலிருந்து நீக்கப்பட்டு ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பாக ஒழுக்காற்று நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் முன்னெடுப்பதோடு, அவை முடியும் வரை தற்காலிகமாக கட்சியின் அடிப்படை உறுப்புரிமையிலிருந்து நீக்கப்பட்டிருந்தார்கள்.

இவ்வாறான சூழ்நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அழைப்பையேற்று ஜனாதிபதியுடனான சந்திப்பில் கலந்து கொள்வதற்காக முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தலைமையிலான குழுவில் ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்காக கட்சியின் உறுப்புரிமையிலிருந்து தற்காலிகமாக நீக்கப்பட்டிருந்த எச்.எம்.எம்.ஹரீஸ், பைசல் காசிம், எம்.7ஸ்.தௌபீக் ஆகியோரும் கலந்து கொண்டிருந்ததைக் காணக்கூடியதாகவிருந்தது.

முஸ்லிம் காங்கிரஸ் கட்சியினரை ஜனாதிபதி சந்திக்கும் நிகழ்வில் எந்த அடிப்படையில் முஸ்லிம் காங்கிரஸிலிருந்து தற்காலிகமாக நீக்கப்பட்ட உறுப்பினர்கள் ஒழுக்காற்று விசாரணைகள் இன்னும் முடியுறுத்தப்படாத நிலையில் கட்சி சார்பாக கலந்து கொள்ளலாம் எனப்பல்வேறு விமர்சனங்களைத் தோற்றுவித்திருக்கிறது.

முஸ்லிம் காங்கிரஸின் கட்சியின் தீர்மானங்களை உதாசீனம் செய்து விட்டு தலைமைத்துவத்திற்கு கட்டுப்படாது கடந்த கால மோசமான ஆட்சிக்கு ஆதரவு வழங்கி, அந்த ஆட்சியின் அட்டூழியங்களுக்கு துணை போன முஸ்லிம் காங்கிரஸின் ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களின் செயல்களால் முஸ்லிம் சமூகம் வெக்கித் தலைகுனிந்திருக்கும் இச்சந்தர்ப்பத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உயர்பீட உறுப்பினர்கள், போராளிகள், ஆதரவாளர்கள் எனப்பலரது வேண்டுகோளின் பேரிலும், அதிருப்தியின் காரணமாகவும் இவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது என்பதை மறுக்க முடியாது.

> **முஸ்லிம் காங்கிரஸின் கட்சியின் தீர்மானங்களை உதாசீனம் செய்து விட்டு தலைமைத்துவத்திற்கு கட்டுப்படாது கடந்த கால மோசமான ஆட்சிக்கு ஆதரவு வழங்கி, அந்த ஆட்சியின் அட்டூழியங்களுக்கு துணை போன முஸ்லிம் காங்கிரஸின் ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களின் செயல்களால் முஸ்லிம் சமூகம் வெக்கித் தலைகுனிந்திருக்கும் இச்சந்தர்ப்பத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உயர்பீட உறுப்பினர்கள், போராளிகள், ஆதரவாளர்கள் எனப்பலரது வேண்டுகோளின் பேரிலும், அதிருப்தியின் காரணமாகவும் இவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது என்பதை மறுக்க முடியாது.**

கடந்த கோட்டாபாய அரசாங்கத்தின் செயற்பாடுகளால் நாடு பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்ட சந்தர்ப்பத்தில் பொதுமக்கள் கிளர்ந்தெழுந்ததன் விளைவாக தங்களால் இனியும் கோட்டா அரசாங்கத்திற்கு ஆதரவு கொடுத்து தங்களின் அரசியல் எதிர்காலத்தை அழித்திட முடியாதென்ற இறுதி நிலையிலேயே முஸ்லிம் காங்கிரஸின் மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரமதாசாவிடம் அரசியல் தஞ்சம் கோரியதைக் காண முடிந்தது.

தற்போதைய அரசியல் சூழ்நிலையில் பல சந்தர்ப்பங்களில் பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு தேவை என்பதனாலும், தனது கட்சிக்கான பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையைப் பலப்படுத்தும் நோக்கிலும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரமதாசா இணைத்துக்கொண்டாலும் இவர்களின் செயற்பாட்டால் வெறுப்புற்ற சாமானிய மக்கள் இதுவரை இவர்களை ஏற்றுக்கொள்ளத்தயாராகவில்லை என்பதை இவர்களுக்கெதிரான விமர்சனங்களே வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன.

இவ்வாறான தொடரில் தாங்கள் எதிர்க்கட்சிக்குள் தஞ்சமடைந்திருப்பதனால் ஐக்கிய மக்கள் சக்தி தங்களின் அணியாக இவர்களை பாராளுமன்றத்தில் இணைத்துக்கொண்டு பாராளுமன்றத்திற்கும் அண்மையில் அறிவித்திருந்தது.

எனவே, முஸ்லிம் காங்கிரஸும் ஐக்கிய மக்கள் சக்தியின் பங்காளிக் கட்சியாகவிருப்பதனால் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரமதாசா வழங்கிய பாவமன்னிப்பு முஸ்லிம் காங்கிரஸுக்கும் பொருந்தும் என நினைத்துக்கொண்டு முஸ்லிம் காங்கிரஸுடன் முன்னர் வகித்த பதவி நிலைகளில் தொடர்ந்து கொண்டு செல்லலாம். இனி மேலும் ஒழுக்காற்று நடவடிக்கை என்ற பேச்சுக்கே இடமில்லை என்பதோடு, அடுத்து வரும் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸின் சார்பாக போட்டியிட வாய்ப்புக்கிடைக்கும் மக்களும் அதிகளவான வாக்கினை எமக்குத்தந்து வெற்றி பெற வைப்பார்கள் என்ற நம்பிக்கையில் இம்மூவரின் எண்ணங்களும் இருக்கின்றது.



ஜனாதிபதியூடனான முஸ்லிம் காங்கிரஸ் கட்சியினரின் சந்திப்பில் தாங்கள் அழைக்கப்பட்டதால் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியிலிருந்த தடைகளெல்லாம் நீங்கி, ஒழுக்காற்று விசாரணைகளும் கிடப்பில் போடப்படும் நாம் தலைவரின் பின்னால் ஒழிந்து கொண்டு அரசியலை முன்னெடுக்கலாம் என்ற எண்ணங்களும் அவர்களின் உள்ளங்களை குளிரச் செய்திருக்கிறது.

ஆனால், வாக்களித்த, ஆதரவளித்த மக்களோ இச்செயலைக்கண்டு நொந்து போயிருக்கிறார்கள்.

இவ்வேளையில் பொறுப்புள்ள கட்சி என்ற அடிப்படையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைமையும் அதன் உயர்பீடமும் எந்த அடிப்படையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிஸுடனான ஜனாதிபதியின் சந்திப்பில் ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்காக கட்சியின் உறுப்புரிமையிலிருந்து தற்காலிகமாக நீக்கப்பட்ட குறித்த மூன்று பாராளுமன்ற உறுப்பினர்கள் அழைத்துச் செல்லப்பட்டார்கள் என்பதற்கு விளக்கமளிப்பதுடன், இவர்கள் தொடர்பான ஒழுக்காற்று நடவடிக்கைகள் எந்தளவில் தற்போதிருக்கிறது அல்லது ஒழுக்காற்று நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டுவிட்டதா? என்பதையும் மக்களுக்கு தெளிவுபடுத்தும் தார்மீகக்கடமை தலைவருக்கு இருக்கிறதென்பதை உணர்ந்து செயற்பட முன்வருவீர்கள் என கட்சியின் போராளிகள், அபிமானிகளின் எதிர்பார்ப்பாகவிருக்கிறது.

பாரம்பரியமான முஸ்லிம் சமூகத்தின் தாய்க் கட்சியின் நடவடிக்கைகள் தொடர்பாக இளம் தலைமுறையினரும், ஏனைய சமூகங்களும் அவதானித்துக் கொண்டிருக்கிறது.

எனவே, இவ்வாறான சம்பவங்கள், நிகழ்வுகள் அவர்கள் மத்தியில் பிழையான எண்ணப்பாடுகளைத் தோற்றுவிக்கும். அதே போன்று, முஸ்லிம் காங்கிரஸின் நடவடிக்கைகள், தீர்மானங்கள் அண்மைக்காலமாக மக்கள் மத்தியில் கேலிக்கூத்தாகப் பார்க்கப்படுவது வருத்தமளிக்கிறது.

மேலும், கோட்டா அரசாங்கத்திற்கு இப்பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவு கொடுத்த சந்தர்ப்பத்திலிருந்து இவர்களுக்கெதிரான ஒழுக்காற்று நடவடிக்கை தொடர்பிலும் முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் உட்பட உயர்பீடம் தொடர்பிலும் அவநம்பிக்கையான கருத்துக்கள் பலராலும் வெளிப்படுத்தப்பட்டு வந்த சந்தர்ப்பத்தில் அவைகளை உண்மைப்படுத்துவதாக இத்தகைய சந்தர்ப்பங்கள் அமைந்து விடக்கூடாது.

பலருக்கு முகவரி கொடுத்த இக்கட்சியை முவரியற்ற கட்சியாக தயவு செய்து யாரும் ஆக்கி விடவேண்டாமென இக்கட்சிக்காக தங்களின் உயிர்களைத்தியாகம் செய்த தியாகிகளின் சார்பாக, உடமைகளை, உடல் அவயங்களை எனப்பல்வேறு தியகங்களை மேற்கொண்டு கட்சி வளர்த்த அத்தனை ஆத்மாக்களின் சார்பாக பொறுப்பிலுள்ள, இந்த பொறுப்புக்கள் (அமானிதம்) தொடர்பாக மரணத்தின் பின் பதில் சொல்லவிருக்கும் அனைவரிடமும் இக்கட்சியை நேசிக்கும் அனைத்துள்ளங்களின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மக்களுக்கும் தங்களின் பொறுப்பினை இனியாவது சரியாகப் புரிந்து கொண்டு கடந்த கால அனுபவங்களில் பாடம் கற்றுக்கொண்டவர்களாக எதிர்காலத் தேர்தல்களை பயன்படுத்த வேண்டும்.

மக்களின் தீர்ப்பே மோசமான அரசியல்வாதிகளுக்கு இறுதியானதாக அமையுமென எதிர்பார்க்கிறோம்.

**எம்.என்.எம்.யஸீர் அறபாத்**
**ஓட்டமாவடி**

# நவயுகத்தில் கற்போனும் கல்வி உளவியலும்

21ம் நூற்றாண்டிலே தொழிநுட்பத்தின் உச்சத்தில் ஒடிக் கொண்டிருக்கும் நாம் எம்முடைய நாற்பொழுதுகளை; காலைச் சூரியன் கண்விழித்தது முதல் இரவு சந்திரன் விழித்தெழும் வரையிலும் இல்லை. காலை மாலை என்ற வேறுபாடின்றி மணிக்கூட்டின் முட்களுக்கு ஒய்வில்லையேன் ஏன் எமக்கு மாத்திரம் ஒய்வு வேண்டுமோ? எனொ தொழிநுட்பத்தின் பிடியில் சிக்குண்டு நகர்த்திக் கொண்டிருக்கிறோம். இந்நவ யுகத்திலே எம்மவர்களின் செயல்கள் அனைத்தும் ஊண் தொடக்கம் உரக்கம் வரையிலே நவீனம் பெற்றுள்ளமை நாம் அறிந்த ஒன்றேயாகும்.



இதனிடத்தில் கல்வி ஒன்றும் இதிலே விதிவிலக்கல்லயே!. மேலும் திண்ணமாக நோக்குகையில் நவீனம் கல்வியில் பல மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது எனவும் அல்லொ கல்வி நவீனத்தில் பல மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது எனவும் இரு பார்வை கொள்ளலாம். இவ்விரண்டிலேயே ஒன்று இல்லையெனில் மற்றொன்றும் இடம் பெற்றிருக்க வாய்ப்பில்லை எனவும் ஐயமின்றிக் கூறலாம்.

இந்நவீன கல்வியினை நோக்கின் கல்வியானது (Education) கற்போனின் (Learner)உள்ளுணர்வில் காணப்படுகின்ற பல்வேறுபட்ட ஆற்றல்களையும் திறன்களையும் வெளிக்கொண்டுவர உதவுகின்ற செயன்முறையாகும். கல்வியினுடாக வெளிக் கொண்டுவரப்படுகின்ற கற்போனினது ஆற்றல்கள் மற்றும் திறன்கள் அவனுடைய அறிவு உடல் ஒழுக்கம் போன்றவற்றுடன் தொடர்புடையவையாகும். அது மாத்திரமன்றி கல்வி என்பதற்கு உயர்த்துதல் என்றும் பொருள் கொள்ளப்படுகிறது. அதாவது கற்போனது நிலையை உயர்த்தவல்ல விடயமாகும்.



இவ்வாறான கல்வியின் முதிர்ச்சியின் ஒரு விளைவே உளவியல் எனவும் குறிப்பிடலாம். உளவியல் (Psychology) என்பது மனதைப் பற்றிக் கற்றல் அல்லது ஞானம் பற்றிய கற்கை என இணங்காணப்பட்டது. இன்று மனித நடத்தை பற்றிக் கற்கும் ஒரு விஞ்ஞானம் எனப்பொருள் கொள்ளப்படுகிறது. மேலும் "Psychology is the science of mind and behavior உள்ளம் மற்றும் நடத்தைகளைப் பற்றிய ஒரு (விஞ்ஞானம்) கற்கை உளவியல் எனப்படும். இதிலே மனித செயற்பாடுகள் அனைத்தையும் நடத்தை எனக்குறிப்பிடலாம்.

இன்றைய உளவியலானது விஞ்ஞான முறையின் மூலமாக தனிநபர் குழு உறுப்பினர்களது தரவுகளை சேகரித்து நடத்தைகளை பகுப்பாய்வு செய்து எதிர்வு கூறுவதாகவே காணப்படுகிறது. எனவே மனிதனின் அனைத்து நடத்தைளும் உளவியலின் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்படுகிறது. இவ்வுளவியலானது பல பிரிவுகளை உள்ளடக்கியது. அதனிலே பிரயோக உளவியலின் ஓர் கிளையாகவே கல்வி உளவியல் காணப்படுகிறது. மேலும் கல்வி உளவியல் நவீன உளவியலின் ஒரு பகுதி எனவும் குறிப்பிடலாம்.

கல்வி உளவியல் (Educational psychology) பற்றிய பரவலாகப் பயன்படுத்தப்படும் அறிஞர்கள் கருத்துக்கள் சிலொ

Rifford (1984), Grinder *(1981)*- உளவியலில் இடம்பெற்றுள்ள நுட்பமுறைகளை வகுப்பறைச் செயல்களையும் சமூக வாழ்க்கையும் கற்பதற்குப் பயன்படுத்திக் கொள்வதற்கு முயற்சி எடுத்தல்.

woolfolk – - கல்வி உளவியல் பிரதானமாக கற்றல் கற்பித்தல் செயல்முறைகளை விளங்கிக் கொள்வதற்கும் அச் செயல்களை விருத்தி செய்வதற்குமான நுட்பமுறைகளை அபிவிருத்தி செய்து கொள்வதற்கு வழிகாட்டுகிறது.

Lindgren(1980) - கல்வி உளவியல் கற்பவர் (Learner ) கற்றல் செயல்முறை (Learning Process )கற்றல் சந்தர்ப்பங்கள் (Learning situations) ஆகிய 3 அம்சங்களையும் உள்ளடக்கியுள்ளது.

இன்று கல்வி உளவியலானது தனித்துறையாக வளர்ச்சியடைந்துள்ளது. உளவியலின் இக்கிளை குழந்தைப் பருவம் மற்றும் இளமைப்பருவத்தின் கற்றல் செயன்முறையை மட்டுமல்லாமல் வாழ்நாள் முழுவதும் கற்றலில் ஈடுபடும் சமூக உணர்ச்சி மற்றும் அறிவாற்றல் செயன்முறைகளை உள்ளடக்கியதாகும்.

இதன் மூலம் கல்வி உளவியலானது கற்றல் கற்பித்தல் செயன்முறையில் செல்வாக்குச் செலுத்துகிறது என்பது தெளிவாகிறது. கற்பிப்போனின் கற்பித்தல் செயற்பாட்டின் மூலமாகவே கற்போன் கல்வியைப் பெற்றுக்கொள்கிறான். கல்வி கற்றல் கற்பித்தல் ஆகிய செயற்பாடுகளானது ஆரம்ப காலங்களில் வெறுமனே கல்வி என்ற அடிப்படையில் மாத்திரமே நோக்கப்பட்டது. பிற்காலத்தில் அதாவது நவீன வளர்ச்சியில் உளவியல் உருவம் பெற்ற பின்னரே கல்வி உளவியல் என்ற அடிப்படையில் கல்வி பிரச்சினைகள் யாவும் ஆராயப்படுகின்றன. எனவே உளவியல் தொடர்பான அறிவினை கல்வியில் பிரயோகிப்பதாகவே கல்வி உளவியல் காணப்படுகிறது எனச் சுருக்கமாகக் குறிப்பிடலாம்.

அதாவது கற்றல் கற்பித்தல் செயற்பாட்டினை உளவியல் நிலையில் ஆராய்ந்து கற்போனுடைய கற்றலை மேம்படுத்த உதவும் வழிமுறைகளை கண்டறியும் உளவியல் பிரிவாகும். மேலும் கற்போனது கற்றலை விஞ்ஞான ரீதியாக விளக்க முற்படும் ஓர் அறிவுப்புலம் எனவும் கூறலாம். இவற்றைக்கொண்டு நோக்கின் கல்வி உளவியலில் புதிய தகவலை கற்போன் எவ்வாறு கற்கின்றான் கற்போனின் அறிவாற்றல் அறிவாற்றல் வளரச்சி உணர்ச்சி நடத்தை மற்றும் கற்போனின் உளவியல் வளரச்சி போன்றவற்றை அறிவதும் ஒரு பகுதியாகும்.

எவ்வயதினிலும் எப்போதினிலும் குறுகியகாலக் கற்கையோ அல்லது நீண்டகாலக் கற்கையோ காலவரையறை எவ்வாறிருப்பினும் கற்போன் தனது கற்றலை எவ்வாறு ஆரம்பிக்கிறான் எவ்வாறு கற்றலில் வளர்ச்சி அடைந்து கொள்கிறான் அவனின் வளர்ச்சிப் படிநிலைகள் என்ன? அவை ஒவ்வொன்றிலும் காணப்படும் வளர்ச்சி மற்றும் முன்னேற்றம் வளரச்சிசார் செயல்கள் அவற்றில் எழும் பிரச்சினைகள் அதனைத் தீர்ப்பதற்கான நுட்பங்கள் ஆற்றல்கள் மற்றும் அவற்றை வெளிப்படுத்திடும் கற்போனது வெளிப்படையான நடத்தைகள் போன்றவற்றை அறிந்துகொள்ளாமல் தற்காலத்தில் கல்விச் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாது என நவயுக தோற்றமான கல்வி உளவியல் எடுத்துரைக்கிறது.

எவ்வாறெனில் கற்போனைப் பற்றிய பூரணத்தகவலறிந்த பின்னர் கற்போனின் தன்மையறிந்து அவனுக்கு எவ்வாறான கற்றலை மேற்கொள்ள வேண்டும் கற்றல் கற்பித்தலில் ஈடுபடும் போது எவ்வாறான நுட்பங்களைப் பயன்படுத்த வேண்டும் மற்றும் கற்றல் கற்பித்தலின் போது உருவாகும் பிரச்சினைகளை எவ்வாறு முறியடித்து கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் கற்றல் தொடர்பான கொள்கைகள் கோட்பாடுகள் என்பவற்றை அறிந்து கற்பித்தலை செயற்படுத்துவதனூடாக கற்போனிடமிருந்து சிறந்த பெறுபேறுகளைப் பெற முடியும். இதுவே தற்கால கல்வி நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடலாம்.

இவ்வாறான கற்றல் கற்பித்தலின் பின்னர் கற்போனின் வளர்ச்சியை மதிப்பிடுவதே கல்விச் செற்பாட்டின் அடுத்தகட்டப் படிமுறை இதிலும் கல்வி உளவியல் செல்வாக்குச் செலுத்துகிறது. அதாவது கற்போனை மதிப்பிடும் முறைகள் ஏலவே குறிப்பிட்டவை போல கற்போனின் கல்விச் செயற்பாட்டிற்கு ஏற்ப கற்போனின் தன்மையறிந்து மதிப்பிடும் முறைகளைக் கண்டறிந்து அவற்றைச் சிறந்த முறையில் நடைமுறைப்படுத்த வேண்டும். அவ்வாறே கற்றல் மதிப்பீட்டின் போது ஒவ்வொரு கற்போனையும் தனித்தனியாக ஆய்வு செய்து அவன் சார்ந்த பிரச்சினைகளை இணங்கண்டு அவைகளுக்கான தீர்வைக் கண்டறிய வேண்டும். அத்தோடு கற்றல் கற்பித்தலின போது கற்றல் குறைபாடுகளைக் கண்டறிந்து சரி செய்வதோடு வேவ்வேறு கற்பித்தல் முறைகளின் திறன்களையும் பயன்களையும் கற்போனின் தன்மையறிந்து அவனிற்கு ஏற்றாற் போல கணித்தல் வேண்டும்.

இவ்வாறாக நவயுகத்தில் கற்போனின் கல்விச் செயற்பாட்டில் கல்வி உளவியல் பாரிய தாக்கம் செலுத்துகிறது. அதாவது கல்விச் செயற்பாட்டின் முதன்மைக் காரணியான கற்போனை அடிப்படையாகக் கொண்டே கல்வி உளவியலானது நடைமுறைப்படுத்தப்படுகிறுது. மழலையர் பள்ளி (Kindergarten) தொடக்கம் அனைத்து கல்விச் செயற்பாடுகளிலும் கற்போனே மையப் பொருளாகிறான். இதுவே நவயுகத்தில் கற்போனிடமிருந்து சிறந்த பெறுபேறுகளைப் பெற வழிவகுக்கிறது எனவும் நவயுக வளரச்சிக்கு கற்போனும் கல்வி உளவியலுமே அடிப்படைக் காரணம் எனவும் ஐயமின்றிக் கூறலாம்.

**MUHAMMED FARUK SIMRA SANOOFAR.**
2ND YEAR FIA, SOUTH EASTERN
UNIVERSITY OF SRI LANKA.

